# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரிக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | ஆ 1-க்கு | ரு. 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, | ரு. 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: | ,, | ரு. 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:— | ஒருகலம் | ரு. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரு. 5-00 |
| ,, | கால்கலம் | ரு. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.

விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கஎ. } யாழ்ப்பாணம்:—குரோதனஹு ஆனிமீ ககூஉ; (1925 ஜுலாய் 2) வியாழக்கிழமை. { இலக்கம்—ந.


உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிறு லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேறு
மதம்பூத்தவிநாயகன்றுள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


## உங்கள் உணவின் உருசி.

சமையல்பாகத்திற் கெட்டுப்போகாமலிருக்க எப்பொழுதும் பிரக்கியாதிபெற்று விளங்கும்

**ருக்மணி குக்கர்**

சமையல் அடுக்கில் சமையல்செய்யுங்கள். சாதமும் 4, 5 பதார்த்த வகைகளும் இரண்டு முதல் எட்டுப்பேருக்கு, ஒரேமணி நேரத்தில் சொற்ப செலவில் தொந்தரவில்லாமலே தயாரிக்கலாம். உணவின் உருசியும் சத்தும் நிறைந்திருக்கும், மாணவர் பிரயாணிகள் முதலியோருக்கும், வீடுகளுக்கும், தனித்தவர்களுக்கும் உபயோகம். விலை 18 ரூபாமுதல் 33 வரை. ஜாபிதா இனும்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
(H) இராயபுரம்,
(Y. 45.) சென்னபட்டினம்.



## Hakeem, M. Mohamed Ebraheem & Co;
HAMEETHIA AYURVEDIC UNANI
MEDICAL HALL.
POTO-NOvO (South India)

### அருமைத் துரைகளே! பொறுமையாய்க் கவனியுங்கள்!

இழந்துபோன பலத்தையும், நலத்தையும், நரப்புத் திடத்தையும் அதி அற்புத ஆச்சரியமான சுக சக்தியையும் இது உபயோகித்த ஒரே வேளையில் தெரிந்துகொள்ளலாம்.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிக் கடிதங்களும்
தங்க மெடல்களும் பரிசு பெற்ற
[illegible] தன யோஹன

## சிட்டுக் குருவிச் சத்தின் லேகியம்.

அசல் பாகம்! ——o—— அருமையானது!!

பரிக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதமுள்ளது. இந்தப் பாகம் சரியாக வேறு எந்தக் கம்பெனியார்களும் செய்து காட்டினாலும் அல்லது இது நாங்கள் உண்மையான பாகப்பிரகாரம் சரியாக செய்யவில்லை என்று ருஜுவித்தாலும் சரியே அவர்களுக்கு எங்கள் கம்பெனியால் ரூபா 1000 இனும் கொடுக்கப்படும்.

### அன்பின் மிக்குள நண்ப சிகாமணிகளே!

அருமையும், அநுபவமும், பெருமையும், பிரபல்யமும், மஹா அற்புத ஆச்சரிய சக்திகளும் வாய்ந்த இந்த அசல் "முபற்ரு" லேகியத்தை உபயோகிக்கும் உத்தமர்கள் இல்வாழ்க்கையிலே நாம் என்றுங் கண்டிராத சித்தானந்த கெம்பீர சிற்சுகவிலாச நலன்களையும், சில அற்புத குணங்களையும் தெரிந்துகொள்வார்கள். ஆஹா! குணத்தால் சிறந்த இந்திரலோஹத்திய "மகாசஞ்சீவினி" இதுதானோ? என்றும் பன்முறையும் புகழ்வார்கள். ஆகைப் பிறந்து இவ்வுலகத்தில் வளர்ந்து இளம் பால்யப் பருவத்திலேயே குருமரோய்வாய்ப்பட்டுக் கெட்டும், இன்னும் பலவித காரணங்களினாலும் தேஹத்திற்கு சத்காரணமாகிய சுக்கிலத்தை வீண்விரயஞ்செய்தும், நல்ல வாலிபப் பருவத்தில் வாத பித்த சிலேற்பன மிகுதிக் குறைவாலும், எலும்புருக்கி முதலான வெப்புரோகங்களினாலும் ஜீவரத்ன பீடமாகிய தேகம் தளரப்பெற்றவர்களும், மித்திரபங்கம் என்னும் ஓர்வித கொடிய நோயினால் எப்பொழுதுஞ் சஞ்சலப்பட்டுக்கொண்டிருப்பவர்களும், சுரம் பிரமேகம் விஷப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தம் கரைந்து சர்வ நரம்புகளுந் தளர்ந்து ஐம்புலன்களின் உற்சாகமும் குறைந்து, ஞாபகசக்திக் குறைவு, கை கால் அசதி, தேஹாங்கை, இடுப்புவலி, பசிமந்தம், மலச்சிக்கல் முதலிய வியாதிகளால் சதா வருந்துவோரும்,

மனோ தத்வ புத்திசாதுர்யத்தைக் கொண்டு வேலைசெய்யக்கூடிய லாயர்கள், குமாஸ்தாக்கள், படலீகர்களும், மற்றும் ஞாபகசக்தியால் வேலையையுடைய, எந்தத் தொழிலாளர்களும் இதனை உபயோகித்தால் கல்ல உற்சாகமும், சந்தோஷமும் அடைவார்கள். திடமான தேஹக் கட்டுப்பாட்டையும், புதிய மேனியையும், இரத்தவிர்த்தி ஞாபகவிர்த்தி சந்தானவிர்த்தி முதலிய சர்வ நலன்களையும் பெறுவார்கள். தாருட்யசக்தியின் குறைபாட்டினால் ஏற்பட்ட பலவிதமான நோய்களினாலும், பீடிக்கப்பட்டு இரவும் பகலும் அதுவே கவலையிலானவர்களுக்கு திட்டமாக குணம் செய்வதில் இது மகா வல்லமையும் பேரும் பிறகீர்த்தியும் பெற்றது. இதனை பரிக்ஷிக்கும் ஒவ்வொரு நண்பர்களுக்கும் தப்பாமல் குணம்செய்யும். சத்தியமான சித்தானந்த யோகபாகம் இதுதான என்று நாம் சொல்லவேண்டியதில்லை. பலனும் நலனும் சில அற்புத ஆச்சரிய வல்லமையக் குணங்களும் ஒரே வேளையில் தெரியும். கண்டாலே தெரியும் சாக்ஷி! தினமுரீல தெரியும் திடன!! இத்தகைய குணங்கள் இதில் இல்லையென்று சத்தியமாகச் சொல்லுகிறவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபா 1000 இனும் கொடுக்கப்படும். பரிக்ஷை செய்யவும். உபயோக விபரம் கூடவே வரும்.

அன்பர்களுக்கோர் அறிவிப்பு:—

இக்காலத்தில் சில போலி வைத்தியர்கள் கிளம்பி பலவித இமிட்டேஷன் லேகியங்களையே டை சிட்டுக்குருவி லேகியமென்று விற்று வருகிறார்கள். ஆகையால் அத்தகைய லேகியங்களைத் தருவித்து மோசம்போய்விடாமல் நமது விலாசத்தைக் கவனித்து எழுதவேண்டியது. டை முழுபாகம் தருவிப்பவர்களுக்கு உசித இராசமணி 1 இனும்.

| | | |
|---|---|---|
| | 40 நாள் மருந்து 16 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 10—0—0 |
| | 20 நாள் மருந்து 8 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 5—0—0 |
| பரிக்ஷைக்கு | 10 நாள் மருந்து 4 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 3—0—0 |

வி. பி தபால்செலவு முதலியன முழுபாகத்திற்கு அணு 12, அரைபாகத்திற்கு அணு 7, கால்பாகத்திற்கு அணு 5 பிரத்தியேகம். மருந்தின் கிரயத்தை முன்பணமாக அனுப்புகிறவர்களுக்கு போஸ்டேஜ் சார்ஜ் இனும்.

விசேஷ கவனிப்பு:—பினங்கு, சிங்கப்பூர், குவாலாலம்பூர், செட்டான், மோரிஸ் முதலிய வெளிப்பிரதேசங்களில் உள்ளவர்கள் மருந்தின் கிரயமும், தபால் செலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணமாக மணியாடர் அல்லது போஸ்டல் ஆர்டராக அனுப்பியே மருந்து பெறவேண்டும். நமது விலாசம்:—

ஹக்கீம், எம். முஹம்மது இபுருஹிம் அண்ட் கம்பெனி,
மானேஜர், ஏ. முகம்மது யூசுபு,
ஹமீதியா ஆயுர்வேத யூநானி வைத்தியசாலை,
(Q. 63). பறங்கிப்பேட்டை (தென்னிந்தியா).



[ ESTABLISHED 1609.]

## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
Kairul Muslimeen Medical Hall
PORTONOVO (*SouthArcotDistrict*).

### ஏ ஜ ண் டு தே வை.

குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.
அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா 1000 இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது
உத்தரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

### லேகியத்தின் முக்கிய குணமாவது

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகைத்தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்ச்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்த்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதிலுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனே [illegible] வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபாற் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபாற்செலவு இனும். பினங்கு, சிங்கப்பூர், சிலோன், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசிகள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். டையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது டை குருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ருபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயமும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ருபித்தும் இனுமுடையபணமும் கிரயமும் கொடுபடா விட்டால் கோர்ட்மூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரியகுணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தைச் செய்து காட்டினாலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

TEL. ADDRESS:—
Khader Bros.
Porto Novo.
(Y. 38).

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைருல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.




## ஒரு சாதாரண பொருளே.

நோவுக்கான தைலத்தில் சுகந்தம்தேடமாட்டீர். அநேகமாய்ச் சுகந்தம் உண்டாக்குவதில் நோவை நீக்குங்குணம் மறைந்துவிடுகிறது.

### லிட்டில்ஸ் ஓரியன்டல் பாம்

செய்வதில் சுகந்தமே வேண்டுமென்று எதுவுஞ் சேர்க்கவில்லை நோவைக் குணமாக்குஞ் சரக்குகளில் அவைகளின் குணத்தை விலக்கவில்லை. 12 திறமான சரக்குகள் சேர்ந்து அதி உயர்ந்த குணங்கள் வாய்ந்த தைலமே லிட்டில்ஸ் ஓரியன்டல் பாம். அதனால் அது உடனே கீல்வாயு, தலைக்குடைச்சல், இடுப்பு வலி, பாரிச வாய்வு, வாதரோகம், மண்டையிடிப்பு, முதலிய நோவுகளைத் திட்டமாய்க் குணப்படுத்துகிறது.

4—L—25.




(Y. 41. B.)

யாழ்ப்பாணப் பட்டின பரிபாலன சங்கம்.

பட்டின பரிபாலன சங்கத்தின்

எட்டாம் வட்டாரப் பிரதிநிதியாக

ஸ்ரீ. மு. தாமோதரம்பிள்ளை

(மாமாத்தம்பி)யைத்

தயவுசெய்து

தெரிவு செய்யுங்கள்.

(Q 66)

காணி விற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாணம் பெரியகடைக்கு அணித்தாக செப்பரப்பு 27½ கொண்ட காணி விலைக்கிருக்கிறது. குடியிருத்தற்கும் கடைகள் கிட்டங்கிகள் கட்டுதற்கும் தகுந்த இடம். தெருவோரத்திலுள்ளது.

மற்றும் விபரங்கள் வேண்டுமாயின் கீழ்க் கண்ட விலாசத்திற்கு எழுதுக.

X

C/o. இந்துசாதன மானேஜர்,
வண்ணார்பண்ணை.

(Mis. 670).

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— குரோதன ஹு ஆனிமீ [illegible] வியாழக்கிழமை.

## வன்னிக் கமச்செய்கை †

வன்னிக் கமச்செய்கையைப் பற்றியும் குடியேற்றத்தைப்பற்றியும் பலமுறை கூறியுள்ளேம். எங்கள் பழைய தேசாதிபதியாகிய ஸேர் உவில்லியம் மனிங் அவர்களே முதன்முதல் இந்த விஷயத்தைப்பற்றிப் பேசியவர். சென்ற 1919-ம் ஆண்டு ஊரத்தினபுரி ஐக்கியநாணயசங்கக் கூட்டத்திற் செய்த பிரசங்கத்தில் இவ்விஷயமாகத் தேசாதிபதி பின்வருமாறு கூறியிருக்கின்றார்:—

"அந்நியநாடுகளிலிருந்து இப்பொழுது உங்களுக்கு அரிசிநெல் அனுப்பப்படமாட்டாவெனத் தோற்றுகின்றது. நீங்களாகவே விளைவிக்கும் உணவுப் பொருட்களிலேயே இனிமேல் நீங்கள் தங்கியிருக்கவேண்டியேற்பட்டிருக்கின்றது. இது ஒரு நியாயம். இன்னுமொரு நியாயமிருக்கின்றது. இந்தியாவிற்கும் பிரமதேசத்திற்கும் உங்கள் பணத்தை ஏன் நீங்கள் அனுப்புகின்றீர்கள். பிரமதேசத்தில் விளைவிக்கப்படுதல்போல இங்கே உங்களுடைய நாட்டிலும் நெல் விளைவிக்கப்படலாமே. கறிக்குரிய வெஞ்சனங்கள் இந்தியாவில் ஆக்கப்படுதல்போல இங்கும் ஆக்கப்படலாதுமே. இங்குள்ள கமக்காரர் தங்களுக்குப் போதிய உணவுப்பொருள்களைத் தாங்களே ஆக்கிக்கொள்ளலாதும். எஞ்சியவற்றை, இதுகாறும் கடைகளிலும் கிட்டங்கிகளிலும் உணவுப் பொருட்களை வாங்கும் பட்டின வாசிகளுக்கு இக்கமக்காரர் விற்றுக்கொள்ளலாதுமே. நீங்கள் இப்படி ஏன் செய்யவில்லையென்பது எனக்கு விளங்கவில்லை. இங்கே நீங்களே உங்களுக்குரிய உணவுப்பொருள்களையும் கறிக்குரிய வெஞ்சனங்களையும் ஆக்கிக்கொள்வீர்களேல் இவற்றையெல்லாம் குறைந்த விலைக்கு விற்றல் முடியும். இப்படிச் செய்வதனால், இங்குள்ள கமக்காரர் அதிக செல்வத்தை ஒருபோது அடையாவிட்டாலும், இப்பொழுதுள்ள நிலைபரத்திலும் சற்று நல்ல நிலைபரத்தில் இருத்தல் முடியும். அதுவுமன்றி, உங்கள் பணம் இப்பொழுது போவதுபோல இந்தியா பிரமதேசம் முதலிய அந்நிய நாடுகளுக்குப் போகாது உங்கள் ஊரிலேயே தங்கி நிற்கும்."

நமது தேசாதிபதி இப்படிச் சொல்லிச் சில காலம் செல்வதற்கிடையில் அரிசிப் பஞ்சம் வந்துவிட்டது. இலங்கை அரசினரும் ஊரவர்களும் இந்த நாட்டிற்குத் தேவையான உணவுப்பொருளை இங்கேதானே ஆக்கிக்கொள்ளல்வேண்டுமென முயற்சிசெய்தனர். ஆனாற் பஞ்சம் நீங்கவே ஊரவர்கள் தாங்கள் கொண்டுள்ள முயற்சியையும் நழுவவிட்டனர். சென்ற நவம்பர்மீ சட்டநிருபண சபையில் "பட்ஜற்" எனப்படும் பரிபாலனச் செலவுத் திட்டத்தைப்பற்றி விவாதித்தபோது கௌரவஸ்ரீ பாலசிங்கமவர்கள் கமச்செய்கைக் காதாரமான நீர்ப்பாய்ச்சுதல் விஷயமாகவும் நிதிச்சங்கம் (வங்குகள்) விஷயமாகவும் சில பேசினர். இரணைமடுக் குளவேலை நிறைவேறியசமையத்தில் கரைச்சியிற் கமச்செய்கையைப்பற்றி ஊரவர்களுக்கிடையில் அதிக கிளர்ச்சியுண்டானது. கரைச்சிக் கமச்செய்கை விஷயமாக ஊரவர்கள் பலவாறு யோசித்தனர். இப்பத்திரிகையும் வேறு பத்திரிகைகளும் அவ்விஷயமாகப் பலவாறு எடுத்துக் கூறின. வடமாகாணப் பிரதிநிதிகளும் கரைச்சிக் கமச்செய்கையை எப்படி விருத்திசெய்யலாமென்பதையிட்டு யோசிக்கும்படி மகாசபைகளைக் கூட்டினர். இவற்றின் பயனாக இங்குள்ளாருட் பலர் வன்னியிற் சென்று குடியேறுதல்வேண்டுமென நிச்சயிக்கப்பட்டது. சட்டநிருபண சபைச் சனப்பிரதிநிதிகளே இதனை ஆரம்பித்தல் வேண்டுமெனவும் நிச்சயிக்கப்பட்டது. இந்தளவில் இவ்விஷயம் இப்பொழுது நிற்கின்றது. ஆனால் வறுமையும் பிழைப்பின்மையும் ஊரிற் பணமில்லாமையும் இங்குள்ளாரைப் பெரிதும் சங்கடத்துள் ஆக்கிவிட்டன.

இப்பொழுதே காலம் கஷ்டமான காலமாகவிருக்கின்றது. இனி இன்னும் கஷ்டமான காலம் வரும்போல் தோற்றுகிறது. இந்தியாவிலே சென்றவருடம் நேர்ந்த வெள்ளப்பெருக்குக் காரணமாகத் தானியங்கள் சேதப்பட்டமையினால் இந்தவருடத்தில் அங்கிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி நெல் முதலியன விலையேறுதல் கூடும். சில மாசங்கட்கு முன்னர் பெருங் காற்றுக் காரணமாக, அரிசி நெல் இங்கு ஏற்றிவந்த பாய்க்கப்பல்கள் மோசமடைய அதனாலே நகரத்தார் அரிசி நெல் முதலிய உணவுப்பொருள்களின் விலையை ஏற்றினர். அதுவும் ஒரு எச்சரிக்கையாக நமக்கு இருந்தது. கப்பல்கள் சேதம்போயினமையினால் இங்குள்ள செட்டிப்பிள்ளைகள் பலர் நஷ்டமடைந்தனர். யாழ்ப்பாணத்தில் செட்டிப்பிள்ளையொருவருடைய கடை முறிந்துபோய்விட்டதென வதந்திபிறக்கின்றது. இதுவும் எங்களுக்கு ஒரு படிப்பனையாக இருத்தல்வேண்டும். இந்த வருடத்தில், செட்டிப்பிள்ளைகள் எமக்குத் தேவையான அரிசி நெல்லைத் தருவிப்பார்களோவென்பது சந்தேகத்திற்கிடமாகும். இங்ஙனம் இவர்கள் போதிய அரிசிநெல்லைத் தருவிக்கத் தவறுவரேல் இவற்றின் விலை ஏறுதல் நிச்சயம். உணவுப்பொருட் பஞ்சமும் நேருதல்கூடும்.

விஷயங்கள் இப்பொழுது இருக்கும் நிலையிலேயே இனிமேலுமிருக்குமேல் மாறிமாறி உணவுப்பொருட்பஞ்சமும் விலையேற்றமும் இங்கே வந்துகொண்டிருக்குமென்பது நிச்சயம். இதனை நாங்கள் விரைவில் அகற்றாதொழிவேமேல் ஒருகாலத்து உணவுவிஷயமாக எங்களுக்குப் பெரும் ஆபத்து வருமென்பது திண்ணம். நாங்கள் எங்கள் பிள்ளைகளுக்கும் பிற்சந்ததியாருக்கும் பொருள் தேடி வைத்தல்வேண்டுமென்பதிற் கண்ணுங்கருத்துமா யிருக்கின்றேம். எங்கள் பிள்ளைகளை அதிக பொருள் செலவிட்டுப் படிப்பிக்கின்றேம். எங்கள் பொருள் பண்டங்களை யெல்லாம் பிள்ளைகள்பொருட்டே விடுகின்றேம். அவர்கள் தங்கள்காலத்தில் நல்லாயிருத்தல்வேண்டுமென்பதே எங்கள் ஆசை. எங்கள் பிள்ளைகள் உழைத்து ஈட்டும் பொருள் முழுவதும் அவர்களுடைய ஆவசியகமான தேவைக்குத்தானும் போதாமலிருக்கிற காலமும் சமீபத்தில் வரும். வருஷந்தோறும் பொருள்களின் விலையேற, சனங்களின் வருவாய் குறைந்துவருகிறதென்பதை ஊன்றி யோசிப்பவர்களெல்லாரும் அறிவர். இதற்குச் செய்வதென்னவென்பதே இப்பொழுது யாமெல்லாரும் யோசிக்க வேண்டியது.

எந்தச் சாதியார் உணவுக்குச் உடைக்கும் பிறரை நம்பியிருக்கின்றார்களோ அந்தச் சாதியாரைப் பிறர் ஒருபோதும் கௌரவிக்கமாட்டார்கள். அந்தச் சாதியாருக்கு மதிப்பில்லையாம். உலகத்திலே தங்களுக்குரிய உணவுப்பொருளைத் தாங்களே ஆக்கிக்கொள்ள முடியாத எத்தனையோ தேசத்தார் இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் அப்பொருள்களை வாங்குவதற்கான பணத்தை யீட்டிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தேசங்களிலேதான் கைத்தொழிலும் மற்றும் முயற்சிகளும் அதிகமாகச் செய்யப்படுகின்றன. அந்த நாட்டிலிருந்து வெளியேபோகும் பொருளைக்காட்டிலும் வெளியிலிருந்து அந்த நாட்டிற்கு வரும் பொருள் அதிகமாகும். எங்கள் தேசத்தின் விஷயமோ அப்படியல்ல. என்ன பொருள்தான் அந்நிய நாட்டிலிருந்து இங்கே அனுப்பப்படவில்லை? யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஒருவன் தனது சீவனத்தின்பொருட்டுத் தினமும் வாங்கும் பொருள்களை எழுதிப் பார்த்தால் அவைகளுள் ஒருபொருளாயினும் தானாக இங்கே ஆக்கி உபயோகிக்கும் பொருளாக இருக்கமாட்டாது.

இங்கே படித்தவர்கள் என்றிருப்பவர்கள் நாள்தோறும் எத்தனை அந்நியநாட்டுப்பொருள்களை உபயோகிக்கின்றார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திற் சிந்திக்கவேண்டும். அதிகாலையில் ஒருவர் நித்திரைவிட்டெழுந்தவுடன் அவர் கைகால் சுத்திசெய்வதற்குத் தண்ணீர்மொள்ளும்போது உபயோகிக்கும் வாளிதானும் நமது ஊரில் ஆக்கப்பட்டதன்று. அவர் உபயோகிக்கும் சவர்க்காரம் இங்கிலாந்தில் ஆக்கப்பட்டது. அதன்பின் அவர் உட்கொள்ளும் பலகாரம் காப்பி என்னும் இவைகளுள் காப்பி இப்பொழுது இங்கே உண்டாக்கப்படுவதில்லை. காப்பியோடு கலக்கப்படும் சீனி அந்நியநாட்டிற் செய்யப்படுவது. தகரப்பால் சுவிற்ஸர்லன்டுதேசத்தில் ஆக்கப்படுவது. பலகாரத்துக்கு உபயோகிக்கப்படும் அரிசி நெல் அரக்கன் முதலிய இடங்களிலிருந்து இங்கு கொண்டுவந்து இறக்குமதிசெய்யப்படுவன. உபயோகிக்கும் பாத்திரங்கள் இந்தியாவிலேனும் இங்கிலாந்திலேனும் செய்யப்பட்டுள்ளவை. போசனம் முடிந்தபின் உடுத்திக்கொண்டு அவர் புறப்படுவரேல் அவரது உடைமுழுவதும்—உண்டியிலே மாட்டப்பட்டிருக்கும் குண்டூசிதானும், ஐரோப்பாவில் ஆக்கப்படுவனவாம். காலையில் அவர் ஏதும் வாசிக்கும் வழக்கமுடையவரானால் வாசிக்கப்படும் புத்தகங்களும் பெரும்பாலும் அந்நியநாட்டில் அச்சிடப்பட்டனவாம். அதன்பின் அவர் தன் உத்தியோக ஸ்தானத்திற்குத் துவிசக்கர வண்டி மூலமாகவேனும் "றிக்ஷா" மூலமாகவேனும்செல்லுவரேல் அவைகள் எங்கே செய்யப்பட்டுள்ளன என்பது எங்களுக்கு நன்றாய்த் தெரியும். பின்னேரத்திலே தேகாப்பியாசத்தின்பொருட்டுப் பந்துவிளையாடுவரென வைத்துக்கொள்வோம். அந்த விளையாட்டில் உபயோகிக்கும் உபகரணங்கள் எல்லாம் அந்நியநாட்டில் ஆக்கப்படுவனவாம். இனி மத்தியான போசனத்தைப்பற்றிச் சொல்லுகில் அரிசி கறிக்குரிய வெஞ்சனங்களெல்லாம் அந்நியநாட்டிலிருந்து தருவிக்கப்படுவனவாம். தண்ணீரும் உப்பும் (தேங்காயுமே) நமது நாட்டிற்குரிய பொருள்களென்று சொல்லலாம். இக்காலத்தில் ஏற்றப்படும் விளக்கும் விளக்கெண்ணெயும் அந்நியநாட்டிலிருந்துவருவன. எழுதுவதற்கான உபகரணங்கள் காகிதம் காகிதஉறை என்னுமிவைகள் துணிமணிகள் பிறவூரிலிருந்து தருவிக்கப்படுவன. இவைகள் மாத்திரமா? சிறுகுழந்தைகட்கு அருத்தும் ஆகாரந்தானும் அந்நியநாட்டிற் செய்யப்பட்டுள்ளன.

மேலே சொல்லப்பட்ட இத்தனை பொருள்களும் பிறவூர்களிலிருந்து இங்கே இறக்குமதி செய்யப்படுகின்றனவே. இவைகளுக்குப்பதிலாக இங்கிருந்து நாம் பிறவூர்களுக்கு ஏற்றுமதிசெய்யும் பொருள் யாது? ஒன்றுமில்லையே. இங்கிருந்து மலையாளத்திற்கு அனுப்பப்படும் புகையிலையுங்குறையத் தொடங்கிவிட்டது. நாங்கள் இவ்வாறான கேவல நிலையிலிருந்துகொண்டும் வன்னிக் கமச்செய்கை விஷயத்தில் அலட்சியமாக இருப்பது ஆபத்திற்கேதுவல்லவா? வறுமையும் பசிபட்டினியும் எங்களை வருத்தத் தலைப்படுமோனால் சாட்டுக் காய்ச்சலுக்குப் பயந்து ஆவது என்ன? மரணத்துக்குத் தானும் அஞ்சியாவதென்ன? யாழ்ப்பாணவாசிகளே! விழிமின்! இல்லையேல், எக்காலத்தும் விறகு தறிப்பவர்களாகவும் தண்ணீர் மொண்டுகொண்டு வந்து கொடுப்பவர்களாகவும் காலங் கழியுங்கள். வன்னிக்குப் போக வேண்டி யேற்பட்டிருக்கின்றது. மரணம் இங்குமுண்டு; அங்குமுண்டு; எங்குமுண்டு; உங்களிடத்து நீங்கள் நம்பிக்கையை வையுங்கள்; கடவுளை விசுவசியுங்கள்; முயற்சியால் (அகால) மரணத்தையுந் தவிர்க்கலாம் எனத் துணியுங்கள்; உங்களை உலக நன்மையின் பொருட்டு அர்ப்பணஞ் செய்யுங்கள். அஃதின்றி மேலான கருமம் எதனையும் பெறுதல் அசாத்தியம். உங்கள் முதாதையர் இந்த மணற்றிடரைத் தங்கள் முயற்சியினாற் சிறந்த செழிப்புள்ள நாடாக மாற்றிவிடவில்லையா? அவர்களிடத்து விளங்கிய அபிமானம் உங்களிடத்து என்இல்லாதொழிந்தது? யாழ்ப்பாண வாசிகளே! விழிமின்! எழுமின்! இல்லையேற் கீழே கிடந்து நசிந்து போவீர்களென்பது திண்ணம்.

† இது, சென்ற திங்கட்கிழமை (29—6—25, இந்துசாதன ஆங்கில பிரசாரத்தில் வெளிவந்துள்ள பிரதான வியாசத்தின் மொழிபெயர்ப்பாகும்.

## தேவாரத்திருமுறைவெளிவந்தமை

(முற்றொடர்)

அபயகுலசேகரசோழராசன் விநாயகக் கடவுள் தன்மீது பாலித்த கிருபையின் பெருமையை மனதிற் சிந்தித்துக்கொண்டு தில்லைச் சிதம்பரத்தை யடைந்தான். அரசன் சிவகங்கை என்னும் புண்ணியதீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ்செய்து கனகசபையை யடைந்து குஞ்சிதபாத நடராசப் பெருமானைத் தரிசித்த பின் தில்லைமூவாயிரவர் நாற்பத்தெண்ணாயிரம் மகேசுரர் திருமடத்ததிபர் அகம்படிமைத்தொண்டு பூண்டோர் முதலினோர்க்குப் பொல்லாப்பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய சமாசாரம் முழுவதையும் விரித்துக் கூறினன். இந்த வார்த்தையைக் கேட்ட தில்லைவாழந்தணர் முதலினோர் "வேந்தே! அத்திருமுறைகள் சேமித்துவைக்கப்பட்டிருக்கும் திருக்கதவு சமயகுரவர் மூவருடைய கையடையாளத்துடன் இருக்கின்றது. அவர்கள் வந்தாலன்றிக் கதவு திறக்கப்படமாட்டாது" என்றார்கள். அரசன் அறிவிற் சிறந்தவனாதலினால் அவர்களிடம் வேறு யாதுங் கூறிலன். தனது நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு ஓர் தந்திரமுறையை அனுசரித்துச் சபாநாயகருக்கு ஓர் விசேட உற்சவம் நடாத்தினான்; திருநெறித் தமிழ்வேதத்தை அருளிச்செய்த சமயகுரவர் மூவரையும் எழுந்தருளச்செய்து, திருவீதியில் உலா வருவித்து, நடராசப்பெருமான் எழுந்தருளியிருக்கும் கனகசபையை வலமாகக் கொண்டு, தேவாரத்திருமுறை சேமிக்கப்பட்டிருக்கும் ஸ்தானத்தை அடைந்தவுடன் "தில்லைத்தலவாசிகளே! சமயகுரவர் மூவரும் இங்கு எழுந்தருளினர்; இனிக் காலதாமதமின்றிக் கதவு திறக்கப்படவேண்டு" மென்றான். சிதம்பரவாசிகள் அரசன் கூற்றுக்கு உத்தரம் புகலமுடியாதவர்களாய்த் தியங்கினார்கள்.

மெய்யடியார்கள் பேரின்பப் பேறு பெற்ற பின்னரும் எக்காலத்தும் எவராலும் போற்றப்பெறுவர். அவர்கள் செய்துள்ள சிறு கைங்கர்யங்களும் உண்மை வாக்கியங்களும் என்றும் உலகத்தை நல்வழிப்படுத்திக்கொண்டு விளங்கும். அவ்வவதாரபுருடர் என்று முளராவர். அச்சமயகுரவர் மூவருக்கும் அவர்களது திருவுருவங்களுக்கும் சிறிதும் பேதம் பாராட்டாத உத்தமனாக அரசன் விளங்கியமையினால் அவன் அவர்களது திருவுருவங்களை எழுந்தருளச் செய்து இங்ஙனம் கூறினான். ஆங்கு எழுந்தருளப்பெற்ற திருவுருவங்களைச் சமயகுரவரல்லரென மறுத்தல் சிதம்பரதலவாசிகளாற் கூடாதாயது. சமயகுரவரால் கையடையாளமிடப்பட்ட கதவைத் தாம் திறத்தல் குற்றமாமென அச்சங்கொண்ட தில்லைவாழந்தணரும் ஏனைச் சிவனடியார்களும் அரசனுடைய கேள்விப்படி கதவைத்திறக்க உடன்பட்டனர். திருக்கதவு திறக்கப்பெற்றது. ஐம்புலன்களால் மறைக்கப்பட்டுக் கிடக்கும் அஞ்ஞானிகளுடைய அறிவைப்போல அங்குள்ள தேவாரத்திருமுறைகள் புற்றுமண்ணினால் மூடுண்டு கிடந்தன. அரசன் அத்திருமுறைகளைப் புறத்தே எடுத்துவைத்து மண்குவியலைப் போக்கும் வண்ணம் எண்ணெயை அதிகமாக வார்த்தினன். அவ்வேடுகளிற் பெரும்பான்மையானவை பழுதடைந்திருப்பதைக் கண்டான். அவனுடைய நெஞ்சம் துடித்தது; ஆறாத்துயரம் அவனைத் தன் வசப்படுத்தியது; அவன் நெட்டுயிர்த்தான்; கண்ணீர் ஆறுபோலப் பெருக்கினான்; வாய்விட்டுக் கதறி அழுதான்;

இதன்தொடர்பை ௬ ம் பக்கத்திற் காண்க.

## இலங்கை இந்தியரின் அனுதாபக் கூட்டம்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்றரை மணியளவில் கொழும்பிலுள்ள "ரௌவர் ஹோலில்" இலங்கையிலுள்ள இந்தியரின் பகிரங்கக் கூட்டமொன்று ஸ்ரீமாந். சித்தரஞ்சன தாஸ் அவர்களின் ஞாபகத்தின் பொருட்டுக் கூடியது. அத்தருணம் டக்டர் ஐ. டேவிட் அவர்கள் அக்கிராசனம் வகித்தனர். கௌரவ மிஸ்டர் F. A. ஜயபிசேகரா, கௌரவ மிஸ்டர் I. X. பெரிரா, ஸ்ரீ. இ. பதமநாதன் முதலான பலரும் அங்குச் சமுகமாயிருந்தனர். ஸ்ரீமாந் தாஸ் அவர்களின் தேகவியோகத்தைக் குறித்து அநுதாபமுறும் பொருட்டு அங்குக் குழுமினோர் சிறிது வேளை எழுந்து அமைதியாக நின்றனர் அவரது பிரிவு காரணமாக ஓர் அநுதாப நிர்ணயம் பிரேரிக்கப்பட்டது. கௌரவ மிஸ்டர் பெரிரா அதனைத் தமிழ் வார்த்தைகளால் அநுவதித்தனர். பின்னர்த் தமது அநுதாபச் சமாசாரத்தைச் ஸ்ரீமாந் தாஸ் அவர்களின் குடும்பத்தார்க்குத் தெரிவிக்க வேண்டுமெனப் பேசப்பட்டது. அதனைச் சபையோர் அங்கீகரித்தனர். இங்கு யாழ்ப்பாண சங்கம் முதலான பல சங்கங்கள் இருந்தும் அவை ஸ்ரீமாந் தாஸ் அவர்களின் தேகவியோகங் காரணமாக அநுதாபக் கூட்டங்கள் நடத்தாதொழிந்தன. இங்குள்ள சபை, சங்கம், கழகம் முதலியவற்றின் உள்ளக்கிடக்கையை யாம் சிறிதும் அறிந்திலேம். கீழ்நாடன்றி மேல் நாடுதானும் பெரிதும் போற்றும் ஒரு உத்தம தேசாபிமானி தேகவியோகமெய்திய இச்சந்தர்ப்பத்தில் எமது சங்கங்களும் பிறவும் மௌனம் பூண்டிருப்பது கண்டு நாம் மிக வருந்துகின்றேம்.

## க டி த ம்.

### புருஷார்த்தம்.

மானுடருக்கு இம்மை மறுமை இரண்டிற்கும் பயன்படுகின்ற புருஷார்த்தம் நான்குள்ளன. அவையாவன, அறம், பொருள், இன்பம், வீடு என்பவைகளாகும். அறமாவது, பாவமில்லாத உண்மைவழியிலேயிற்றல் அந்த வழியிலே நின்று சம்பாதிப்பதே பொருள், அப்பொருளை உதவியாகக்கொண்டு குலமும் குணமும் பருவமும் ஒத்த கன்னிகையை அக்கினிசான்றாக வேதவிதிப்படி விவாகஞ்செய்து அநுபவிப்பதே இன்பம். அவ்வின்பம் அநித்தியமென்று வெறுத்து பரைஞானம் வாயிலாகச் சம்பாதிப்பதே வீடாகும். இதனாலன்றோ அறத்தை முன்னும் பொருளை அதன்பின்னும் இன்பத்தை அதன்பின்னும் முறையறித்துவைக்கப்பட்டது. இவற்றின் வகைகளை அறநூல், பொருள்நூல், இன்பநூல், வீட்டுநூல் என்பனவற்றுட் காண்க.

சுண்டுரைக்கிற் பெருகுமென்றஞ்சி விடுத்தேன். முதலிலே சொன்ன தருமநெறிவழியினால் ஏனைய பொருள், இன்பம், வீடு என்பவை பயன்படாவாம். இதனாலன்றோ வேதத்திலே இலைமறைகாய்போலக் கிடந்த பொருள்களைத் தமிழ்நாட்டாருக்கு அறிவிக்கத் தொடங்கிய ஔவைப்பெருமாட்டி தொடக்கத்திலே 'அறஞ்செய விரும்பு' என்றார்.

இங்ஙனம்,
மு. ஆறுமுக உபாத்தியாயர்
வட்டுக்கோட்டை.

## இலங்கைத் தமிழாசிரியர் சபையின் வருடாந்தக் கூட்டம்.

1925ம்-ஆ ஆனி-மீ 23ம்-உ செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4½ மணியளவில் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மண்டபத்தில் ஐந்நூற்றுக்கதிகமான அங்கத்தவர்களும் சபைப்பாதுகாவலராகிய வித்தியாதிகாரியவர்களும் சங்க நன்மைவிருப்பிய பிரபுக்கள்பலரும் சமுகமாயிருக்க தலைவர் கனம் பிறதர். எஸ். பிலிப்ஸ் எஸ் எஸ் ஜே அவர்கள் சப நாயகராயமர்ந்து கூட்டத்தை நடத்தினர். கூட்டமாரம்பமாகுமுன் கௌரவ. வித்தியாதிகாரி எஸ் மக்றே அவர்களைச் சபையார் வாயிலிட்டிலிருந்து மேளவாத்தியத்துடன் குறித்த கல்லூரிமண்டபத்திற் கழைத்துவந்தனர். தெல்லிப்பழை விடுதிப்பாடசாலை மாணவரால் சமுகவிலாசகீதம் பாடப்பட்டது. சபைத்தலைவர் ஆரம்பமாகச் சில குறிப்புரைகள் கூறினர். பின் ஸ்ரீ எஸ். எ. சின்னையாபிள்ளை அவர்கள் வித்தியாதிகாரி பேரில் சபையாரின் வாழ்த்துப்பத்திரமொன்றை வாசித்தனர். மாணவர் வந்தனோபசாரகீதம் பாடினர். காரியதரிசி ஸ்ரீ வீ. ஆர். இரத்தினம் சென்ற வருடாந்த அறிக்கைப்பத்திரம் வாசித்தனர். மாணவர் நன்றிபாராட்டுக்கீதம் பாடினர். பிறதர் இப்னேஷஸ் அவர்கள் ஆசிரியர்க்குப்பெரிய நன்மைகளைச்செய்த வித்தியாதிகாரி அவர்களை வாழ்த்திப் பின்வருமாறு விண்ணப்பித்தனர். அவை வருமாறு:—

1. கூடியசேவைபுரிந்த ஆசிரியரின் வேதன விஷயமாய்:—

இப்போதுவேலைசெய்யத்தொடங்கும் ஆசிரியர்க்கும் 10, 15, 20 வருஷம் சேவைசெய்த ஆசிரியர்க்கும் சம்பளவிகிதம் ஒன்றாயிருத்தல் தக்கதல்லவென்றும் சேவைக்குத் தக்கதாகச் சிறிதாவது வித்தியாசப்படுத்த வேண்டுமென்றும்;

2 பாடவிதான விஷயமாய்:—

அனுபவிபசம் என மீற்றர்முறை தசமபின்னம் சில பூமிசாஸ்திர விஷயங்கள் ஆகியவற்றை நீக்கி உபயோகமான தொழிற் கல்விசம்பந்தமானவற்றைச் சேர்த்தல்வேண்டுமென்றும்;—

3 இளைப்பாறுதல் வேதனவிஷயமாய்:—

குறித்த வேதன விஷயத்தை ஒழுங்குசெய்யக் கருத்துற்றிருந்தாலும், கூடிய சீக்கிரத்தில் ஒழுங்கு செய்ததால் வேண்டுமென்றும் சிலகாலத்துக்குமுன் வயதின் மிகுதியால் தம்தொழிலை விட்டு இளைப்பாறியிருக்கும் ஆசிரியர்களையும் அத்திட்டத்தில் சேர்த்தல் வேண்டுமென்றும்;—

4. சராசரி விஷயமாய்:—

ஒவ்வொரு ஆசிரியரும் படிப்பிக்கவேண்டிய பிள்ளைகளின் சராசரிவிகிதம் அதிகமாயிருத்தலால் அதை மட்டுப்படுத்தி நல்ல ஒழுங்கு செய்ததால்வேண்டுமென்றும் அன்றேல் ஆசிரியரானவர் தம்கடமையைச் செவ்வனேசெய்து கும்பலை அடைதல் அரிதாவதுமன்றி மிகுதியானோர் கலாசாலைகளைவிட்டு வேலையின்றி அலைபவரோ சிலரென்றும் அருங்கதக்கூறின் நாட்டுக்கேகேட்டமாய் முடியுமென்றும்;—

5. பாடபுஸ்தகங்களை ஆக்கல் கொப்பிற்றி விஷயமாய்:—

அரசாட்சிக் கல்விச்சங்கத்தாரே பாடபுஸ்தகங்களை ஆக்கற்கு ஓர் சபையை நியமித்து அவற்றின்மூலம் ஆக்கப்படும் புஸ்தகங்களை அச்சறைவித்து ஓர்புத்தகசாலையை அமைத்து சுயபாஷாபாடசாலைக்குத் தேவையான புஸ்தகங்களைப் பெற்றுக்கொள்ளத்தக்கதான ஒழுங்கைச் செய்ததால்வேண்டுமென்றும் புதிதாக வோர் பாடத்தைப் பாடசாலைகளில் படிப்பிக்கக்கட்டாயப்படுத்த முன்னரே அப்பாடத்துக்குரிய புஸ்தகத்தை ஒழுங்கு செய்ததால் வேண்டுமென்றும், கூறிய இவை முதலானவையே.

பின் ஸ்ரீ எஸ் ஆர். இராசரத்தினமவர்கள் கூடியவிகித வேதனம் பெறவேண்டிய உபாத்தியாயர் குறைந்த வேதனத்தை முகாமைக்காரரிடமிருந்து பெற்றுக்கொண்டு கூடிய வேதனவிகிதத்திற் பற்றிச்சீட்டுக் கொடுக்கிறதாகிய நேர்மையீனமான முறையைக் கையாடுதல்கல்லதல்லவென்றும் அப்படிச்செய்வது அவ்வாசிரியரின் மேற்பொறுத்த பெரிய பிழையென்றும் தெளிவாக வற்புறுத்தினர். முல்லைத்தீவிலிருந்த பிரதிஸ்தர் ஒருவர் அவ்விடத்திலுள்ள ஆசிரியர்பேரால் தம் நன்றியைக்கூறிப்பின் கௌரவ வித்தியாதிகாரி அவர்கள் எழுந்து அங்கு செய்யப்பட்ட சகல வந்தனோபசாரங்களுக்காகவும் நன்றிகூறி வந்தனமளித்துத் தமிழாசிரியராகிய நீங்கள் என்னை அழைத்த காரணத்தை பிறர். இக்கேஷஸ் உடைய உபந்நியாசத்திலிருந்து விளங்கிக்கொண்டேனென்றும் இப்போது நானிருக்கும் நிலையில் யார்தானிருந்தாலும் அவ்வக்காலத்தில் செய்ய வேண்டியதைச் செய்தே நிறைவேற்றுவாராகலொன்றும் கூறிப் பின் கேட்டுக்கொண்ட விண்ணப்பங்கட்கு மாறுத்தரமளித்தனர். அவை வருமாறு:—

1. வேதனவிகித ஒழுங்குகளின் ஆட்சேபங்களுக்கு நியாயங்கூறித் தீர்மானமாய் விட்டதாதலின் இவ்விஷயமாயினி யாதுஞ்செய்ய முடியாதென்றும்;—

2 இளைப்பாறுதல் வேதனம்;—

இனிமேல் இளைப்பாறுபவர்க்கு மாத்திரமன்றி முன் இளைப்பாறியவர்க்குமாகத் தயார் செய்து அரசாட்சியாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறதென்றும் நான் சிறிதுகாலத்திற்கிடையில் அவ்விஷயத்தை நிறைவேற்றி வைப்பேனென்றும்;—

3 ஒவ்வொரு ஆசிரியரும் படிப்பிக்கவேண்டிய பிள்ளைகளின் சராசரி விகிதத்தைப்பற்றி யோசிப்பேனென்றும்;

4 கொழும்பிற்கல்விச்சங்கஆபீசில் அநேக தமிழ்ப் புஸ்தகங்களிருக்கின்றனவென்றும் அவைகளை யாழ்ப்பாணத்திலுள்ள கல்வி ஆபீசுக்கனுப்பி யாவரும் வந்து பார்வையிடத்தக்கதாய் வைக்கும்படி ஒழுங்குசெய்வேனென்றும் கூறிய இவை முதலானவையே.

அன்றியும் ஸ்ரீ இராசரத்தினமவர்கள் உங்களுக்குச் சொல்லிய புத்திமதியை ஒருகாலமும் மறந்துபோகக்கூடாதென்றும் வித்தியாபகுதியிலுள்ள உத்தியோகஸ்தர் பெரும்பாலும் அங்கிலேய பாடசாலைகளிலேயே கருத்துடையவர்களாயிருக்கிறார்களென்று நீங்கள் கருதுவது சரியல்லவென்றும் ஆசிரியரின் இகலோக வாழ்க்கைக்காகிய கருமங்களிலேயே அதிக சிரத்தை பூண்டு வருகிறேனென்றும் தமிழாசிரியர் சங்கத்தோடு கூடி அதிக உதவிகளைச்செய்வேனென்றும் வித்தியாதரிசி ஆசிரியரின் கடமைகளில் திருப்தி கூறியபோதும் தன்னுடைய பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் சிறுபிள்ளைகட்கிடையில் தான் செய்யவேண்டிய கடமைகளைப் பூரணமாய் நிறைவேற்றவில்லையென்று கருதவேண்டுமென்றும் பிள்ளைகளை நேர்மை, சத்தியம், தன்னம்பிக்கை முதலிய குணங்களில் பயிற்றுவதோடு தம் தேசத்தில் அபிமானமுடையவர்களாயிருக்கப் பயிற்றல் வேண்டுமெனவும் இச்சங்கம் சென்றவருடத்தி லும்பார்க்க அருமபெரும் வேலைகளைச் செய்திருக்கிறதென்றும் கூறித் தமது மாறுத்தரத்தை முடித்தனர்.

—தமிழ.

## இந்திய சமாசாரம்.

### காவிரிநதிப் பெருக்கம்.

மலைநாட்டில் அதிக மழை பெய்தமையினாற் காவிரிநதி அளவு கடந்து பெருகியது. திரிச்சிராப்பள்ளியிலுள்ள கிராமங்களிலுள் வெள்ளம் புகுந்தது. சனங்கள் உயர்ந்த இடங்களை நாடுகின்றனர்.

### தேசபந்துவின் ஸ்தானம்

சென்ற திங்கட்கிழமை வங்காளத்திலே சுயராச்சியக்கட்சியாரின் பொதுக்கூட்டமும், வங்காள மாகாணக் கொங்கிரஸ் கூட்டமும் நடைபெற்றன அச் சபைகளின் அக்கிராசனராக ஸ்ரீ ஜந் ஜென் குப்தா அவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

### ஒரு ஐரோப்பியர் சிறைபுகுந்தமை.

பம்பாயிலே ரொனல்டு ஸ்கின்னர் என்னும் ஒரு ஐரோப்பியர் அங்குள்ள அநேக வியாபாரசமுதாயங்களை ஏமாற்றிப் பணம் அபகரித்தாரென்றும் திருடினாரென்றும் குற்றஞ்சாட்டப்பட்டுக் கடும் சிறையும் அபராதமும் விதிக்கப்பெற்றார்.

### இந்திய குடாநாட்டுப் புகைரதம்.

(The Great Indian Peninsula Railway)

இது 1853ம் வருடம் ஏப்பிரல்மீ 16ம்உ ஆரம்பிக்கப்பட்டது. இதுவே இந்தியாவில் முதலாவதாக அமைக்கப்பட்ட இருப்புப்பாதை. 78 வருடகாலம் ஒரு சமுதாயத்தாரால் நடாத்தப்பட்ட இவ்விருப்புப்பாதை சென்ற செவ்வாய்க்கிழமை அங்குள்ள அரசாங்கத்தாரிடம் ஒப்புவிக்கப்பட்டது.

## நாநா சமாசாரத் திரட்டு.

### கலிபோனியாவிற் பூகம்பம்.

சென்ற திங்கட்கிழமை காலை கலிபோனியாவிலே பூகம்பம் நிகழ்ந்தது. தெருக்கள் வெள்ளத்துள் ஆழ்ந்தன. பல பெரிய கட்டிடங்களும் அநேக வீடுகளும் நிலமட்டமாயின. சிலபாகங்களில் நெருப்புப்பற்றிக்கொண்டது. அறுபத்தைந்து பேர் கொல்லப்பட்டனர். மலைச்சரிவுகள் உண்டாயின. 30,000 சனங்கள் வீடின்றித் தவிக்கின்றனர்.

### சீனாவிற் கலகம்.

சீனாவிலே மாணவர் மகாசபை ஒன்று கூடியது. அச்சபை "சீனதேசத்துள்ள மாணவர்கள் எல்லோரும் தங்கள் தேசத்தைக் காப்பாற்றும் பொருட்டு யுத்தஞ் செய்யப் பயிலவேண்டு"மெனத் தீர்மானித்திருக்கிறது. தெருக்களில் நடந்து செல்வோர்மீதும் வாகனங்களிற் செல்வோர் மீதும் கற்கள் வீசப்படுகின்றன. 57 சீனர் பிரான்சிலிருந்து வெளியே துரத்தப்பட்டனர். அவர்களுட் பத்துப்பேர் பெல்ஜியத்துட் புகுந்தபோது அங்குள்ள அதிகாரிகளால் துரத்தப்பட்டனர். பிரான்சிய அரசினர் அங்குள்ள சீனரை மார்சேயில்ஸ்க்குக் கொண்டுபோய் அங்கிருந்து சீனதேசத்துக்கு அனுப்புவதற்குத் தீர்மானித்திருக்கின்றனர். பின்னரும் பள்ளிக்கூட மாணவர் கலகத்தை அதிகரிக்கச் செய்கின்றனர். சங்கிங் என்னும் நகரத்தில் அதிக குழப்பம் உண்டாகுமெனச் சொல்லப்படுகிறது. அங்குள்ள யப்பானியர் எல்லோரும் அதனை விட்டு நீங்கினர். பிரித்தானியரும் பிரான்சியரும் ஒழிந்த அந்நிய நாட்டினரெல்லோரும் ஹமீன் என்னும் இடத்தை விட்டு அப்புறப்பட வேண்டுமென ஒரு அறிக்கை சென்ற செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது.

### மேல்நாட்டில் ஓர் பாழடைந்த பட்டினம்.

உவேல்ஸ் நாட்டிலே ஓர் பாழடைந்த பட்டினம் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதன்பெயர் கென்விக். அது சுவான்சிக்குடாவின் பக்கத்துள்ள மணற்குன்றிலகப்பட்டிருக்கின்றது. உக்கிரமான புயல் அந்த இடத்திலே மணலைவாரி இறைத்தமையினால் அது மறையலாயிற்று. வெற்றிவேந்தன் (conqueror) ஆகிய முதலாம் உவில்லியம் அங்கு அரசுபுரிந்தகாலத்தில் அது சிறந்த நகரமாக விளங்கியது; வியாபாரத்துக்கு மத்தியஸ்தானமாகவிருந்தது; போர்வீரர் தங்கும் ஸ்தானமாகவுமிருந்தது. காலந்தோறும் இந்நகர் மண்மாரியினாற்றுக்கப்பட்டுவந்தது. எலிசபேத் இராணியினுடைய காலத்தில் இது முற்றாக அழிந்ததாயினும் பழுதடைந்த ஒரு கோபுரம்மாத்திரம் வெளியாயிருந்தது. இதன் பக்கத்திலே தோன் கென்விக் என்னும் ஒரு கிராமம் இப்பொழுதிருக்கிறது. கீழ்நாட்டிலே பாழடைந்த நகரங்கள் இருப்பது சகஜம். மேல்நாட்டில் ஓர் பழைய நகரமிருப்பது பலர்க்கும் அற்புதமாகும். ஆயினும் முதலாம உவில்லியத்தின் காலத்திலேனும் அதற்குச்சிறிது முந்தியேனும் கட்டப்பட்டதன்றிக் கீழ்நாட்டிற் பாழடைந்து கிடக்கும் நகரங்களைப்போன்று 2000, 3000, 5000, 10000 என்னும் வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்டதொன்றன்று. இது 900 வருடங்களுக்கு முன்பின்னாகவே அமைக்கப்பட்டதாம்.

## கங்கையின் பெருமையும் மகிமையும்.

நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறில்லா வூருக் கழகுபாழ்—மாறில்
உடற்பிறப் பில்லா உடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை.

என ஔவையார் திருவாய்மலர்ந்தருளியபடி திருநீறு அணியாத நெற்றி பாழாகும்; நெய்யோடு கலந்து புசிக்காத அமுதும் பாழே; ஓர் ஊர் எவ்வளவு சிறப்போடு கூடியதாயிருந்தாலும் ஒரு நதியில்லாவிட்டால் அவ்வூர் சோபிக்காது; மாறுபாடில்லாத உடன் பிறந்தார்கள் இல்லையேல் அவ்வுடம்பு பாழாகும்; அதுபோலவே பெண்டிர் இல்லா வீடும் பாழே.

நம் நாட்டில் எவ்வளவோ புண்ணியநதிகளிருப்பினும் விசேஷ புண்ணிய நதிகள் சிலவே உள. தேவர்களுக்குள் தேவேந்திரன் எப்படி உயர்வோ, அப்படித்து இப்பூலோகத்தில் அநேக தீர்த்தங்களுக்குள்ளே புனிதமாகியது கங்காநதிதான். 'ஆறில்லாவூருக் கழகுபாழ்' என்பதுபோல, கங்காநதியில்லா நாட்டுக்கு அழகு பாழ் என்பதாகும். நம் நாட்டில் இக்கங்காநதி இல்லாவிட்டால், சூரியனில்லாத பகல் எப்படியிருக்குமோ, சந்திரன் இல்லாத இரவு எப்படியிருக்குமோ அவ்வாறிருக்கும்.

ஆகா! கங்காநதி பாயும் பிரதேசமானது என்ன வளப்பமுடையது. புனிதமும், சிரேஷ்டமும், மகாபாதக விமோசனமும், சகலபீடா பரிகாரமும், இகபரசாதனமும், மோட்சமும் தரத்தக்க வல்ல சகல புவன கர்த்தாவாகிய சாம்பசிவமூர்த்தியினுடையசடாமகுடத்தில்வீற்றிருக்கும் ஓ! கங்காதேவியே! நின் பெருமையை யான் என்னென்றுரைப்பேன். இங்கிலாந்தில் ஓடும் தேம்ஸ் நதி உனக்குச் சமானமாகுமா! அல்லது ஆபிரிக்காவிற் பாயும் நைல்நதியானது நின் பெருமைக்கு ஒக்குமோ! ஒருகாலும் ஒவ்வாது நீ எல்லாவற்றிற்கும் தலைமை வகிக்கிறாய். ஆதலாற்றான் நின்னைச் சிவபெருமான் தமது சடாமுடியில் தரித்தார் போலும். சிவபெருமானின் நெற்றிக்கண் சுடரை நிமிரவொட்டாமல் தணிக்கும் ஓ கங்காதேவியே! நின் பெருமையை நோக்குங்கால் ஜனங்கள் நின்னைச் சரணமடையாமலிருப்பார்களோ?

கோடி நட்சத்திரங் கூடினாலும் சந்திரனாகுமா? பத்துக்கோடி மலைகள் சேர்ந்தாலும் பொன்மலையாகுமா? பல்லாயிரந் தேவரானாலும் புருஷோத்தமனாகுமா? அதுபோல எண்ணிறந்த நதிகள் சேர்ந்தாலும் கங்காநதியாகுமோ? என்னே நினது மகிமை!

விதி முறைப்படி உனது தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தால் தீமை கொலை பொய்முதலிய பஞ்சமகாபாதகம் முதலியவற்றின் வேரைக் களைந்து வெந்நீர் வார்த்துவிடுகிறாய் மாயா மயக்கங்களை மாய்க்கும், எமபாசத்தைத் தேய்க்கும், மும்மலத்தையும் நிர்மலமாக்கும் வல்லமையுடையவளாயிருக்கின்றாய். ஜநநந்தோறும் தேடிக்கொண்ட வஞ்சனை துரோகம் பாபம் லோபம் மோகம் முதலியவெல்லாவற்றையும் தீய்க்கும்படியாயும் இன்னும் அநேக நன்மைகளையெல்லாம் கொடுக்கத்தக்கவளாயுமிருக்கின்றாய். எக்கியங்கள் தானங்கள் முதலியன—இன்றொரு தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அதனாலடையும் பலனைப்போல் — எட்டுப் பங்கதிக பலன் நினது தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தாற் கொடுக்கிறாய். சிவபெருமானது சடாமுடியில் நீ இருக்கயோக்கியமானவள் என்பதற்குச் சிறிதேனும் ஐயமுண்டோ!

சுத்தசலத்தில் ஸ்நானம் செய்பவர்கள் எப்போதும் கங்கா யமுனா கோதாவரி என்று நினைத்து ஸ்நானஞ்செய்தாலும் பாபங்களெல்லாம் பறந்தோடிப்போகும்.

கங்காஸ்நானத்திற்குப் போகிறேன் என்று ஓரடி யெடுத்துவைத்தாலும் பாபங்களெல்லாம் பறந்தோடிப்போகும். அவர்களுக்கு மேலுலகம் சுதந்திரமுண்டாம்.

கங்கையைக் காவடியிலே வைத்துக்கொண்டு பற்பல இடங்களுக்குச் சுமந்துகொண்டு செல்பவர்களுக்கும், இதர ஸ்தலங்களில் அபிஷேகஞ் செய்வோருக்கும், செய்துவைப்போருக்கும் என்றும் தீராதவல்வினைதீரும்

கங்கையில் ஸ்நானம் பண்ணவேண்டுமென்று ஒருதரஞ்சொன்னாலும் மகா புண்ணியமுண்டாம்

இக்கங்கா மகத்துவத்தைக் கேளாமல் அலட்சியஞ்செய்து அறிவிழந்த ஒருவன் தட்டித்தடுமாறி ஏதோ காலக்கொடுமையால் அந்தக் கங்கைக்கரையை வந்தடைந்தாலும், அந்தக் கங்கையின் காற்று அல்லது திவலை இவன்மேற்படுமாகில் அவனதுமுன்பின்னுள்ளபாவமூட்டைகளெல்லாம் எரிந்துபோம். இப்பெருமை வாய்ந்த, மகிமைகூடிய கங்காநதியைப் பாராமல், அதில் ஸ்நானம் செய்யாமலிருக்கின்ற நாம் ஒவ்வொருவரும் அக்கங்கையைச்சீக்கிரம் அடையச் சிவபெருமான் அனுக்கிரஹிப்பாராக.

—"சிந்தாமணி."

## மது உண்ணுதலைப்பற்றிச்சில அபிப்பிராயங்கள்.

"மாஹாமை பொருந்திய சக்கரவர்த்தியின் உத்தரவின்படி சாராயம், பீர் முதலிய பானங்களின் உபயோகம் இன்று முதல் அரண்மனையில் நின்றுவிட்டது." (ஏப்பிரல் 6, 1915)

"சாராயம் ஓர் விஷமாகும். அபினியும் அவ்விதமேயாகும். இவைகளை உபயோகிப்பதினால் நம்முடைய சரீர ஆரோக்கியம் எவ்வளவோ கெட்டுவிடுகின்றது." (காலஞ்சென்ற ஸர் ஆண்டிரு கிளார்க்— குவீன் விக்டோரியாவின் வைத்தியர்)

"ஜெர்மனியர்களுக்கு ப்ரான்ஸ் தேசத்திய எல்லா ஸைன்யங்களையும்விட பீர் அபாயகரமான சத்துரு."—காலஞ்சென்ற வான் மோல்க்.

"மதுபானமானது நமக்கு இந்த யுத்தத்தில் ஜெர்மானிய தேசத்து நீர்மூழ்கிக் கப்பல்களைவிட அதிக கெடுதியை விளைவித்துக் கொண்டிருக்கிறது."—(லாயிட் ஜார்ஜ். 1915)

"நான் பேசும் வார்த்தைகளை யெல்லாம் சிறந்த யோசனைகளென்று நினைக்கச் செய்வது சாராயத்தின் தோஷங்களில் ஒன்றாகும்."—(டாக்டர் ஜான்ஸன்)

"என்னகொடுமை! மனிதர்கள் ஓர் சத்துருவை வாயினுள் விழுங்கித் தங்கள் புத்தி தடுமாறும்படியாய் செய்துகொள்வதா? நாம் சந்தோஷத்துடனும், குதூகலத்துடனும், சிரிப்புடனும், கூச்சலுடனும் மிருகங்களைப் போலாகி விடுகிறோம்."—(ஷேக்ஸ்பியர்)

"மதுபானமருந்தும் வழக்கத்தை நாம் நிறுத்திவிடுவோமானால் விவாக ரத்துக்காக ஏற்பட்டிருக்கும் நியாயஸ்தலம் அநேகமாக மூடப்பட்டேயிருக்குமென்று நான் திட்டமாய்ச் சொல்வேன்."—(லார்ட் கோரெல், 1906)

"இந்தத் தேசத்தில் (இங்கிலாந்தில்) பைத்தியக்காரர்களின் தொகை அதிகரித்து வருவதால் நியாயமாகச் சரீர சம்பந்தமானதாகவும் மனசம்பந்தமானதாகவும் எவ்வித வழிகளைக் கொண்டு அவர்களுக்குச் சேர்கேடு வராமல் தடுக்க முடியுமோ அவ்வித வழிகளைச் சீக்கிரத்தில் கைப்பற்றவேண்டும்."(ஸர் எட்வர்ட் ப்ரை)

"சீதள ப்ரதேசங்களில் மதுபான மருந்துவது அதிகக் கெடுதியை விளைவிக்கின்றது." (டாக்டர் ஜான்ரே)

"குழந்தைகளுக்கும், பாலர்களுக்கும் மதுபானத்தில் இச்சையை உண்டுபண்ணுவது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும்" (ஸர் தாமஸ் பார்லோ)

'தலைமுறை தலைமுறையாகக் குடிப்பழக்கமிருந்து வருகிறதென்பது உண்மையான விஷயமே. குடிப்பவர்களுடைய சந்ததிகளையும் அது கெடுத்துவிடுகிறது." (டாக்டர் லூனியர்)

'சாராயத்துடன் நாம் போர் புரிந்தால் அநேக வியாதிகளுடன் போர் புரிவதுபோலாகும்.' (கோகர்)

"முற்காலத்தில் காச நோய்க்கும், சாராயத்திற்கும் சம்பந்தம் கிடையாதென்று நினைத்திருந்தார்கள். ஆனால் பிற்கால ஆராய்ச்சியின்மேல் அது அப்படியல்ல என்று சொல்லப்படுகிறது. மதுபானம் செய்வோர்கள் தான காசநோய்க்கு இலகுவாய் இரையாகி விடுகிறார்களென்று இயர்களால் கருதப்பட்டு வருகிறது." (ஸர் வில்லியம் ஆஸ்லர்)

"மதுவிரோதிகள் நிறைந்த சைன்யத்தை எனக்குக் கொடு. அதை நான் எங்கு வேண்டுமாகிலும் போர்புரியச் செய்கிறேன்." (லார்டு ராபர்ட்ஸ்)

"எவனொருவன் வல்லமை பொருந்திய சைன்யங்களைப் பெற விருப்புகிறானோ, எவனொருவன் தானிருக்கும் படைக்குக் கௌரவத்தைப் பெற விரும்புகிறானோ அவன் அப்படையினர் மதுவை விலக்கச்செய்ய வேண்டும்." ஸர் ஜான் பிரெஞ்சு)

"நம்முடைய புதிய ஆயுதங்கள் கொல்லும் ஜனங்களை விட குடியே அநேகரைக் கொல்லுகின்றது." (காலஞ்சென்ற லார்ட் உல்ஸ்லி)

"குறிபார்த்தடிப்பதில் நிபுணர்களாக இருக்கவேண்டுமானால் மதுவை விலக்குவதே தகுந்த மார்க்கம்." (ஸர் ஜான் ஜெல்லிகோ)

"நாம் இங்கிலாந்தில் குடியை விலக்க முடியுமானால் என்ன பலன்களை நாம் காணலாம். காராக்கிரகங்களும், வேலைசெய்யுமிடங்களும் காலியாவதைப் பார்க்கலாம். ஒரு நூற்றாண்டு நடக்கும் கடும்போரில் சேதப்படும் ஜனங்களைக் காட்டிலும் அதிக ஜனங்களை ஒரு வருடத்தில் காப்பாற்றலாம்." (ஜோஸப் சேம்பர்லேன்) —"ஆரோக்கிய தீபிகை"

---

**பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.**

---

## அடைவுநகை விற்பனவு விளம்பம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் வண்கிழக்கு பஞ்சாட்சரக்குருக்கள் தியாகராசக்குருக்களிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த லேலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1923ம் ஞு ஐப்பசிமீ

நம். உ ரூபா சத. ஊரும் பெயரும் நகைகளின் விபரம்.

415 20 62 04 தெல்லிப்பழை அருளம்பலம் தில்லையம்பலம், பன்னீர்ச்செம்பு கும்பா, தட்டம்

மார்கழிமீ

639 15 43 16 வண்மேற்கு தம்பையா கந்தையா, ஒப்பின் காதோலை சோடி 1
644 17 18 04 கொக்குவில் சின்னத்தம்பி கந்தையா, கைச்சங்கிலி 1
669 23 10 77 தெல்லிப்பழை அருளம்பலம் தில்லையம்பலம், கவுத்தோர் 1

1924ஆ மாசிமூ

772 4 20 92 வண்மேற்கு தம்பு நடராசா, தாலிக்கொடி 1
797 15 10 50 கொக்குவில் சின்னத்தம்பி இளையதம்பி, சட்டைசப்பி ஒலை சோடி 1, சிமிக்கி வாழி சோடி 1

பங்குனிமீ

875 25 35 04 கொக்குவில் சின்னத்தம்பி சரவணமுத்து, சம்பிப்பூரான் சறடு பதக்கம் 1
881 26 30 04 கொக்குவில் சின்னத்தம்பியார் வேலுப்பிள்ளை, கம்பிப்பூரான் சறடு 1

சித்திரைமூ

910 20 10 04 வண்மேற்கு சின்னத்தம்பி பொன்னையா, பொன்காப்பு சோடி 1
913 21 40 04 திருநெல்வேலி கனகசபை கந்தையா, கம்பிப்பூரான் சறடு 1
918 22 25 04 இணுவில் பெத்தப்பு சவுந்திரநாதர், காப்பு ஒற்றை 3, அரைஞாண்கொடி 1
926 28 12 04 கொக்குவில் சிவகுரு தம்பிப்பிள்ளை, குண்டுவைத்த அரைப் பவுண் 2

வைகாசி.

935 7 20 04 இணுவில் சின்னத்தம்பி கந்தையா காப்பு சோடி 1
963 19 24 18 வண் மேற்கு தம்பையா கந்தையா வெள்ளிப் பாதசரம் சோடி 1, வாளி சோடி 1
966 19 40 04 இணுவில் ஆறுமுகம் அப்பாக்குட்டி தாலிக்கொடி 1
971 20 65 04 வண் கிழக்கு தம்பு கந்தையா சங்கிலியும் பவுணும், புரோச்சு 1
972 20 30 04 வண் கிழக்கு தம்பு கந்தையா மோதிரம் 2 குண்டு வைத்த பவுண் 1
992 25 20 04 வண் கிழக்கு கணபதிப்பிள்ளை மாணிக்கம் பதக்கத்து ஒப்பிசம் 2

ஆனிமீ

1017 1 58 04 வண்மேற்கு சின்னப்பு பொன்னப்பா பிலிக்காப்பு சோடி 1
1024 2 80 04 வண் கிழக்கு பண்டாரம் நாகலிங்கம் அதேசிக்காசு 29, முச்கொடி 1, தாழம்பூ 1, வழுதாழம்பூ 1, பிலாக்கு 1, கடுக்கன் சோடி 1
1030 4 15 04 வண் மேற்கு தம்பையா கந்தையா கெண்டைச் சங்கிலி சோடி 1
1034 4 35 04 இணுவில் சின்னயர் பொன்னுத்துரை, கைச்சங்கிலி கூடு 1
1080 16 15 04 சோண்டாவில் சின்னத்தம்பி கந்தையா, கல்லுமோதிரம் 1
1086 16 10 04 தாவடி முருகேசு பொன்னையா, கல்மோதிரம் 1
1087 17 130 04 கலட்டி வெற்றிவேலு சிவக்கொழுந்து, சங்கிலிக்கொடி 1
1089 18 10 04 வண் கிழக்கு சின்னையா சின்னத்தம்பி, கட்டுக்கதிர்கமை சோடி 2
1092 18 30 04 வண் கிழக்கு சங்கரப்பிள்ளை அப்பாத்துரை, காப்புச் சோடி 2, கூடு 1
1105 20 13 04 ஆனைக்கோட்டை சின்னத்தம்பி கனகசபை நாட்டுக்கடுக்கன் சோடி 1
1111 21 10 04 கோப்பாய் சின்னக்குட்டி இளையதம்பி, மணிபட்டியல் 1

விற்பனவு: குரோதன ஞு ஆனிமீ 28உ (11—7—25) சனிக்கிழமை பகல் 10 மணியளவில் எடுபட்ட நகை பிறகிக்களாக ஷை கடைத்திண்ணையிலிருந்து பிரசித்த லேலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
லெந்தீஸ்மேஸ்தர்.

(Mis 675)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்கிழக்கு ஆ செல அ. வீரப்பசெட்டியாரிடத்தில் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த லேலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1923-ம்ஆ ஏப்பிரலமீ.

இல. உ. ரூபா. ஊர் பெயர் நகைகளின் விபரம்.

ஜனவரிமீ

1073 11 25 உடுவில் சின்னத்தம்பி சாமுவேல் டேவிட், பொன் தாலிக்கொடி 1

பிப்ரவரிமீ

1115 2 40 வண்கிழக்கு தியாகர் சின்னத்தம்பி, பொன் சிறுகொலுசுக்காப்புசோடி 1
1135 19 65 தாவடி சிற்றம்பலம் தம்பிப்பிள்ளை, பொன் கொலுசுக்காப்புசோடி 1
1139 21 30 சிவியாதெரு இளையதம்பி சின்னத்தம்பி, பொன் கம்பிப்பூரானட்டியல் 1

ஏப்ரல்மீ

1189 10 10 ஆவரங்கால் வல்லிபுரம் வாரித்தம்பி, பொன் சிறுகாப்பு சோடி 1
1190 10 60 இணுவில் கதிர்காமர் பொன்னையா, பின்கோர்க்கியில்லாத பொன்கம்பிப்பூரான் அட்டியல் 1, தட்டுக்காப்பு சோடி 1, ஆக 2

மேமூ

1212 14 55 நாவற்குளி கணபதிப்பிள்ளை இராமலிங்கம், பொன் கம்பிப்பூரானட்டியல் 1

செப்டெம்பர்மூ

1386 22 65 புத்தூர் இராமநாதர் கந்தையா, பொன்பட்டணக்காப்பு சோடி 1

1924ஆ பிப்ரவரிமூ

10 21 115 சிவியாதெரு ஆறுமுகம் சுப்பிரமணியம், பொன் சங்கிலிக்கொடி 1

எப்பிரல்மீ

65 4 20 சோனகதெரு மிஸ்கின் மீராசா, பொன் அல்க்கொத்து 19
75 12 30 சிறுப்பிட்டி தம்பையா அம்பலவாணர், பொன் சிறுகாப்பு சோடி 1
97 30 45 வண்-கிழக்கு வயிரவிப்பிள்ளை வைத்தியலிங்கப்பிள்ளை, பொன் கம்பிப்பூரானட்டியல் 1

ஜூன்மூ

128 11 25 கந்தர்மடம் தம்பையா சுப்பையா, முகப்பில்லாத பொன்தாலிக்கொடி 1
150 28 35 தட்டாதெரு கதிரவேலுப்பத்தர் முத்துலிங்கப்பத்தர், இமிட்டேசன் சிகப்புக்கல் சிறுபதக்கம் 1
152 28 70 கொழும்புத்துறை சின்னத்தம்பி வல்லிபுரம், பொன் பட்டணக்காப்பு சோடி 1

ஜூலாய்மீ

165 5 45 கரையூர் தாவீது யோசேப்பு, பொன்பட்டணக்காப்பு சோடி 1
171 9 25 அச்சுவேலி இராமலிங்கம் இராசையா, பொன் கம்பிப்பூரானட்டியல் 1
172 9 40 பிரப்பங்குளத்தடி சின்னக்குட்டி சின்னத்துரை, பொன் கம்பிப்பூரானட்டியல் 1
159 2 30 வண்மேற்கு சின்னத்தம்பி சுல்த்தான்மெய்தீன், பொன் கம்பிப்பூரானட்டியல் 1

விற்பனவு:—குரோதன ஞு ஆடி மாதம் 3-ந் திகதி (18-7-25) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை பிறகேலாக மிகுதி கடைத்திண்ணையில் பிரசித்தலேலத்தில் விற்கப்படும்.

அ. ரு செல்லையா உடையார்,
வெந்தீஸ்மேஸ்தர்.

(Mis 674.)

---

அநேக பரிசுகளும் தங்கமெடல்களும் நற்சாக்ஷிகளும் பெற்று உலகப் பிரசித்தி அடைந்திருப்பதோடு 25-8-23-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் அண்டுமருந்துக் கண்காட்சியில் இவர் மருந்துக்கள் பஸ்ட்கிளாஸ் (முதல்த்தர) தேவ ஔஷதங்களெனத் தங்க மெடலும் வைத்தியபதி என்ற பட்டமும் பெற்றவர்.

குஷ்டரோகிகளே!

நீங்கள் இனி இந்த நரக வேதனையில் அழுந்தாமல் மன உல்லாசமாக இருக்கலாம்.

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

**நமது தாம்பிர பஸ்பத்தின் மகத்துவம்.**

நிராகெனக் கைவிடப்பட்ட அநேக குஷ்டரோகிகளை சௌக்கியப்படுத்தி விட்டது.

திமிருடன் உள்ள குஷ்டம், குறைநோய், தடிப்பு, அரிப்பு, கை கால் சுரணையற்று காது, மூக்கு, உதடு, கை கால் சுரவையுள்ள பெருநோய் உள்ளவர்களும் கண்சிவந்து வாய் மூக்கில் துர்வாடை வீசும் மூக்கு அழுகிய அசாத்திய ரோகமுடையவர்களும் சரீரமே ரணமாகி விரல்கள் அழுகிப்போன ஆறாத ரணங்களும், வெள்ளை, வெட்டை, மொழிகளில் குலை, வீக்கம், வலிகை கால் குடைச்சல், கிரந்தி, நமைச்சல், மேகஊரல், பத்து, அரிகிரந்தி, தடிப்பும நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேகவியாதிகளும், வெண்மேகம், செம்மேகம், கருமேகம் முதலிய சகலவித கர்ம வியாதிகளுக்கும்,

# நமது தாம்பிர பஸ்பம்.

சாப்பிடுங்கள்.

முப்புவினுல் தளுக்கற நீற்றியது; களிம்பற்றது; வாந்தி முதலிய கேடுதிகள் ஒன்றும் செய்யாது. பத்தியமில்லை. வியாதிகளை விவரமாய் எழுதவும்.

80-வேளை பஸ்பம் ரூபா 40. 40-வேளை பஸ்பம் ரூபா 20.

20-வேளை ரூபா 10 ஏழைகள் என்று எழுதினுல் பாதிவிலைக்கு அனுப்பப்படும்

காந்தி! தேஜஸ்!! பலம்!! தீர்க்காயுள் சந்தானவிர்த்தி,

அடையப் பிரியப்படுகிறீர்களா! அப்படியாறுல் பழனி, T. R. K.

# தங்கபஸ்பம்.

சாப்பிடுங்கள் (பஸ்பத்தின் மகிமை)

"முடியாத பற்பமது குன்றியுண்ண முனையான காயமது சிவந்து மின்னும்
பிடியாத மதயானைப் பெலனுக்கொக்கும் ............"

என்ற இக்கவியால் பஸ்பத்தின் பெருமை நன்கு விளங்கும். அபார சக்தி வாய்ந்தது. ஜீரண சக்தி, பசி, ரத்தவிர்த்தி உண்டாக்கும். இந்திரிய விருத்தியும் இந்திரிய புஷ்டியும் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை.

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

100-நாள் பஸ்பம் ரூபா 35. 50-நாள் பஸ்பம் ரூபா 20. 25-நாள் பஸ்பம் ரூபா 10., 10நாள் ரூ 5.

## நீரழிவுக்கு ஆப்ரேக் செந்தூரம்.

சாஸ்திபோகும் நீரை நிறுத்தும், தாகத்தைக் குறைக்கும், நீரிலுள்ள சர்க்கரையையும்சரீர வெளுப்பையும் மாற்றி தேஜஸ் பலம் மாகடுக்கும். இதோ ஒருமருந்துக்கும் வரப்படாத வியாதி இந்தமருந்தில் தீருவது வெகு ஆச்சரியமா இருக்கிறது. இப்படி சிரேஷ்டமான மருந்து இதுவரை வெளிவரவில்லை.

40-நாள் மருந்து ரூ. 20, 20-நாளுக்கு ரூ. 10. அநுமான ஆவரை கிருதம் 80 உருண்டை ரூ. 10.

## தாளக பஸ்பம்.

எவ்வளவு நாட்பட்ட காசம்' க்ஷயம், ஈளை, இருமல், ஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு அவசியம் தீரும். புட்டி ரூபா 4.

## நாக பஸ்பம்.

சீழ் மூலம், ரத்தமூலம், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் வெகு சீக்கிரம் குணமாகும். ஆப்ரேஷன் தேவையில்லை புட்டி ரூபா 4.

## பிரமேக நிவாரணி.

ஒரேவேளையில் உங்கள் கஷ்டத்தை நிவிர்த்தி செய்யும், பொறுக்கமுடியாத வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

## இதோ? ரசமணி.

பூசைக்குகந்தது வாசிதம்பிக்கும் சகல வசியம், தனலாபம், கீர்த்தி, காரியசித்தி, தொழிலபிவிருத்தி, புத்திரசந்தானம், மென்மேலும் பெருகும், தொத்துநோய் அகமிருந்து மேகபற்று, சொரி சிரங்கு முதலியவை தீரும். மணி 1-க்கு ரூபா 2 6-மணி ரூபா 10-0-0.

எந்த மருந்துக்கு ஆர்டர் செய்தாலும் கடிதம் எழுதும்போது விவரமாய் நோக குறிகளைத் தெரிவிக்கவும், பினாங்கு, சிங்கப்பூர்த்தேசவாசிகள் முன்பணம் அனுப்பவும்.

**வைத்தியபதி, டி. ஆர். கருப்பணபிள்ளை,**
ஆயுள்வேத வைத்தியசாலை, பழனி.

Q 56. B.)

"பரிசுத்தமுள்ள கங்கா தீர்த்தத்தைச் சடையிற் றங்கிய பெருமானே! பராபரனே!" என்று போற்றி மனம் மிகத் தளர்ந்தான்.

இங்ஙனம் அரசன் வருந்துதலும் அதனைச் சகிக்கலாற்றாதவராகிய சிதம்பர சபாநாதரது திருவருளினால் "அரசனே! வேதசாரமான சைவசித்தாந்தத் தலைவர்களாகிய சமயகுரவர் மூவராலும் பாடப்பெற்ற தேவாரத்திருப்பதிகங்களுள் இக்காலத்துக்கு வேண்டியனவற்றை நாம் பழுதடையாவண்ணம் வைத்தோம்; ஏனையவற்றையெல்லாம் செல்லரிக்கச்செய்தோம்" என ஓர் அசரீரி அந்தரத்தெழுந்தது. இத்திருவார்த்தையைக் கேட்ட அபயகுலசேகர மன்னன் ஆனந்தக் கூத்தாடினன்; பாடினன்; உள்ளக் கவலை யனைத்தையும் போக்கினன்; நம்பியாண்டார்நம்பியினது பாதங்களில் அடியற்ற மரம்போல் வீழ்ந்தான்; சிவனடியார்களுக்கு வேண்டிய திரவியங்களைக் கொடுத்தான். பின்னர், நம்பியாண்டார்நம்பி தேவாரத்திருப்பதிகங்களை யெல்லாம் ஏழு திருமுறையாகவும், திருவாசகம் ஒன்று, திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஒன்று, திருமந்திரத் திருமுறை ஒன்று, ஆகப் பத்துத் திருமுறைகளாக வகுத்தனர். அவற்றுடன் சிவபெருமான் அருளிச்செய்த திருப்பாசுரத் திவ்வியபிரபந்தம் பதினொராந் திருமுறையாக வகுக்கப்பெற்றது. ஏழுகோடி மகாமந்திரங்கள் உளவாதல்பற்றித் தேவாரத் திருமுறைகள் ஏழாகவும், அம் மந்திரங்களுடன் சேர்ந்துள்ள மந்திரங்கள் பதினொன்றுதல்பற்றி அவற்றுடன் திருவாசகம் முதலிய நான்கையும் சேர்த்துத் திருமுறைகள் பதினொன்றாக அமைக்கப்பெற்றன.

இங்ஙனம் திருமுறை வகுக்கப்பெற்ற பின் நம்பியாண்டார்நம்பி சுந்தரமூர்த்தி நாயனர் அருளிச்செய்த திருத்தொண்டத்தொகையைத் திருவருளினால் ஆராய்ந்துணர்ந்தார். அதுகூறும் மெய்யடியார்களுடைய திவ்விய சரித்திரத்தையும் அவர்கள் செய்துள்ள திருத்தொண்டுகளையும், எய்திய பெரும்பேற்றையும் தமது ஆசிரியர் வாயிலாகக் கற்றுணர்ந்த பாலகுமாரர் திவ்வியதிருவந்தாதியைப் பாடியருளினர். அவ்வந்தாதியில் தனியடியார்களாகிய அறுபத்துமூவரையும் திருக்கூட்டத்தினராகிய ஒன்பதுபேரையும் விரித்து விளக்கிப் பாடியருளினர் பின்னர்த் தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பண்முறை வகுக்கவேண்டி நடுநாட்டுள்ள சிவஸ்தலங்கள் இருபத்திரண்டனுள் ஒன்றாகிய திருவெருக்கத்தம்புலியூர் என்னும் சிவஸ்தலத்தை அரசனுடன அடைந்தார்.

அவர்கள் அங்குள்ள தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து ஆலயத்தை வலம்வந்து சிவலிங்கப்பெருமானைத் தரிசித்து "எம்பெருமானே! சமயகுரவர்மூவரும் பாடியருளிய தேவாரத் திருமுறைகளுக்குரிய பண்முறையை வகுத்தருளவேண்டு" மெனப் பிரார்த்தித்தனர். அப்பொழுது "திருநீலகண்ட யாழ்ப்பாணரது மரபில் அவதரித்த ஒரு பெண்ணுக்குப் பண்முறை அருளிச்செய்தோம்" என ஓர் அசரீரி அந்தரத்தில் எழுந்தது. அவர்கள் அப்பெண்மணியை அழைத்துக்கொண்டு கனகசபையை அடைந்து நடராசப் பெருமானுடைய ஆஞ்ஞையின் வண்ணம் திருமுறை வகுக்கப்பெற்றார்கள். தேவாரத் திருப்பதிகங்கள் முழுவதுக்குமுரிய பண்முறை அப் பெண்மணியினால் வகுக்கப்பெற்றது. இங்ஙனமே மேன்மைகொள் சைவநீதி விளங்கும்வண்ணம் சமயகுரவர் மூவராலும் அருளிச்செய்யப்பெற்ற தேவாரத் திருமுறைகள் அபயகுலசேகர சோழராசனுடைய நன்முயற்சியினாலும் நம்பியாண்டார்நம்பியினது பெருமையினாலும் உலகம் உய்ந்து ஈடேறும் பொருட்டுப் பரம்பொருளாகிய சிவபிரானிடத்துள்ள பெருங் கருணையினாலும் வெளிவரப்பெற்றன. இத்தேவாரத் திருமுறைகள் சைவ நன்மக்களால் எக்காலத்தும் அத்தியாவசியகம் பாராயணஞ் செய்யப்படவேண்டியன. அவை முழுவதையும் தினந்தோறும் பாராயணஞ்செய்தல் கூடாதாதலின அதன்கண் நடுநாயகம்போன்று விளங்கும் பஞ்சாட்சரப்பதிகம் கோளறு பதிகம் முதலான சில பதிகங்களையேனும் எமது ஈடேற்றத்தின்பொருட்டு நாம் பாராயணஞ் செய்தல் வேண்டும். தேவாரத் திருமுறைகளிடம் பேரார்வம் பூண்ட அகத்தியமுனிவர் அவை முழுவதையும் ஓதல்கூடாமையினால் அதன்கண்ணுள்ள சில பதிகங்களை விசேடமாக வகுத்துத் தினந்தோறும் பாராயணஞ் செய்துவரலாயினர். அவை இப்பொழுது அகத்தியர் தேவாரத்திரட்டென வழங்கப்பெறும்.

## இந்து சாதனம்.

நமது இந்துசாதனப் பத்திரிகையின் ௩௯-ம் புத்தகம் சென்றவாரத்தோடு பூர்த்தியாக இற்றைப் பிரசாரத்தோடு ௪௦-ம் புத்தகம் ஆரம்பமாகின்றது. சைவசமயத்தவர்பொருட்டும் தமிழகத்தார்பொருட்டும் தன்னால் இயன்றவரையிற் சமயவிஷயமாகவும் சாதிவிஷயமாகவும் அரசியல் விஷயமாகவும் இன்னோரன்ன ஏனைய விஷயமாகவும் உழைத்து வரும் இப்பத்திரிகையை ஆதரித்துவரும் அபிமானிகளிடத்து நன்றி பாராட்டுகின்றோம். பத்திரிகை கிரயத்தை இதுகாறும் அனுப்பாத அபிமானிகள் தயைகூர்ந்து தாமசமின்றித் தங்களால் வரவேண்டிய பணத்தை யனுப்பிவைப்பதோடு இவ்வருடக்கிரயத்தை முற்பணமாக அனுப்பிவைப்பார்களாக. பத்திரிகையை இதுவரையில் ஏற்று ஆதரியாத சைவாபிமானிகள் புதிதாகச் சேர்ந்து இதனை ஆதரித்து வருதற்கு இதுவே வாய்ந்த தருணமாகும். முந்தி நான்கு பக்கமாக வெளிவந்துள்ள இப்பத்திரிகையைச் சிலநாட்களாக ஆறு பக்கங்களுடன் வெளியிட்டு வரலானோம். திருவருளை முன்னிட்டு இனிமேலும் இப்படி ஆறுபக்கங்கொண்டதாக வெளியிட உத்தேசித்திருக்கின்றோம். இங்ஙனம் பக்கங்கள் கூட்டப்பட்டிருப்பினும் பத்திரக் கிரயம் பழைய விகிதப்படியேயாம். ஆதலால் தளர்வின்றி இப்பத்திரிகை நடைபெற்று வருதற்குப் பத்திராபிமானிகள் தயவே பெரிதும் வேண்டும்.

## கதிர்காம யாத்திரை.

கதிர்காம ஆடிமாச உற்சவத்தின் பொருட்டுச் செல்லும் யாத்திரைகாரர் விஷயமாக இலங்கைப் புகைரதப் பகுதியார் முன்னர் வெளியிட்ட விளம்பரத்தைப் பின்வருமாறு மாற்றியிருக்கின்றனர்:—கதிர்காம உற்சவத்திற்குச் செல்லும் யாத்திரைகாரரின் வசதிக்காகக் கிரயங் குறைந்த புகைரதப் பிரயாணச் சீட்டுகள் வருகிற ஆடி மீ ௪உ (ஜூலாய் மீ 20உ) திங்கட்கிழமைதொடக்கம் ஆடி மீ ௧௮உ (ஆகஸ்டு மீ 2உ) ஞாயிற்றுக்கிழமை வரையிற் கொடுக்கப்படும். இந்த மலிவு சீட்டுகள் ஆடி மீ ௨௬உ (ஆகஸ்டு மீ 10உ) திங்கட்கிழமைவரையில் உபயோகிக்கத்தக்கன. ஆடி மீ ௫-ம் தேதிக்கு முந்தி யாத்திரைகாரர் கதிர்காமத்துட் பிரவேசிக்கவொண்ணாதென்றும் இத்தேதி தொடக்கம் உற்சவம் முடியும்வரைக்குமுள்ள காலமாகிய 16 நாட்களுமே அவர்கள் அங்கே தங்கி நிற்றலாகு மென்றும் அரசினர் தமது 'கஜற்' பத்திரிகையில் விளம்பரஞ் செய்திருக்கின்றனர்.

## உலகம் பலவிதம்.

ஸ்ரீமாந் இரத்தினசபாபதி முதலியாருக்கும் ஸ்ரீமதி இராசமணியம்மாளுக்கும் விவாகம் சிறப்பாக நிறைவேறியது. பெண் நாயகனுக்குச் செய்யும் பணிவிடைகளையும், உபசாரங்களையும் வேண்டாவெறுப்பாகவே செய்துவரத் தலைப்பட்டாள். இராசமணி புதியபெண்ணாதலின் நாணத்தினால் இப்படிச்செய்கின்றாளென்று நாயகனும் மற்றுமுள்ளோரும் ஆரம்பத்தில் எண்ணிக்கொண்டார்கள். இதற்கிடையில் பெண்ணை மாப்பிள்ளைவீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோகும் விஷயத்தில் சிறிது விவாதம் ஏற்பட்டது. மாப்பிள்ளை பக்கத்தார் தம்பதிகளை மாப்பிள்ளைவீட்டிற்கு அழைத்துச்சென்று அங்கும் கொண்டாட்டம் நடத்தவேண்டுமென்று சாதித்தார்கள். சேதுகாவலமுதலியாரும் மனைவியாரும் சிலகாலஞ்சென்றபின் பெண்ணை மாப்பிள்ளைவீட்டிற்கு அனுப்புவோம் என்றார்கள். இரத்தினசபாபதி முதலியார் தமதுடைய சுற்றமித்திரர் பலர் கொண்டாட்டத்திற்காகத் தமது வீட்டிற்கு வருவார்களென்றும் ஆகையினாலே உடனே போதல்வேண்டுமென்றும் பெண்ணுக்கும் அதுதான் பிரியமென்றுஞ் சொன்னார். இருபக்கத்தாரும் மெல்லமெல்ல நியாயம்பேசி கடைசியில் பெருஞ்சத்தத்துடன் விவாதஞ்செய்யத் தலைப்பட்டுவிட்டனர். இதற்கிடையில் போசனசாலையில் மிக முயற்சியாகநின்ற முருகரம்மான் என்ன விசேஷமென்று அறியும்படி சமீபமாய் பக்கத்தில் வந்தார். கலகத்தின் காரணத்தை விசாரித்தறிந்தார். சேதுகாவலமுதலியார் மனைவியிடம் முருகரம்மான் போய் "அம்மா, பெரிய இடத்து மனுஷர் நீங்களாக இருந்துகொண்டு இப்படிப்பிடிவாதமாக நிற்கவொண்ணாது" என்று எவ்வளவோ பக்கங்களையுங்காட்டிப் பரிந்துபேசினர். சேதுகாவலமுதலியார்மனைவி பெண்புத்தியினாலும் முருகர் பேச்சைக்கேட்டும் இச்சம்பந்தத்திற்கு முந்தி உடன்பட்டமை உண்மையென்றாலும் மருமகனைக்கண்ட மாத்திரத்தே அவள்மனம் மாறிவிட்டது. "பெண்கோழிகூவி விடிவதில்லை" யென உலகத்திற் சொல்லும்பழமொழி மெய்தான் என்பதை முதலியார்மனைவி அப்பொழுதுதான் உணர்ந்தாள். முருகரம்மானுடன் அவள் முகங்கொடுத்துப்பேசவில்லை. அந்தக்குறிப்பையறிந்த முருகரம்மானுக்குத் தரகுகூலி 100 ரூபாவுந் தொலைந்ததேயென்ற திகில் உண்டாயது. ஆனால் முருகரம்மானுடன் யாராயிருந்தாலும் கோபித்துக்கொள்வது இலகுவான காரியமன்று. ஏனென்றால் முருகருக்குக் கோபம் வருவதேயில்லை. அவரைவாயில்வந்தபடி யாரும் ஏசினாலும் அவர் சிரித்துக்கொண்டு நிற்பார். கடுமையாகச் சினந்தால், மடியிலே தின்னப் புகையிலை இருக்கிறதோவென்று கேட்பார். அடிக்கப்போனாற் கெஞ்சுவார். அடித்தால் "நீயடிக்க நான் படவொண்ணாதோ" என்பர். சேதுகாவல முதலியார் மனைவியுடன் முருகர் உறுத்துத்தனமாக நின்றமையினால் இவரைக் கடத்துவதற்காக முதலியார்மனைவி "எனக்குத்தடையில்லை, தங்கச்சிக்குச் சம்மதந்தானோவென்று நீபோய்க்கேள்" என்றாள். முருகர் "ஓம், ஓம், நூறுமுறையும் போய்க் கேட்கிறேன், கேட்பதென்ன, தங்கச்சிக்குச் சம்மதமென்று உங்கள் மருமகன் சொன்னார்; என்றாலும் நான் ஒருதரம் நேரிற்போய்க் கேட்கின்றேன்" என்று சொல்லிக்கொண்டு இராசமணியிருக்கும் அறைக்கு முருகர் சென்றார்.

* * *

இராசமணி தனக்கு வந்த கதியை யெண்ணி யெண்ணித் துயரப்பட்டுக்கொண்டு தன்னந்தனியே இருக்குஞ் சமயத்தில் முருகரும் போய்ச் சேர்ந்தார். முருகரைக் கண்டதே அவளுக்குண்டான கோபத்துக்கு எல்லையில்லையெனலாம். அவரைக் கண்டுங் காணாதாள்போல இராசமணியிருந்தலும் முருகர் "தங்கச்சி, அவர் தங்கள் வீட்டில் எவ்வளவோ ஆயத்தங்களெல்லாஞ் செய்திருக்கிறார், ஒருக்கால் பெரிய மனசு பண்ணி நீங்களும் போய்த்தான் வரவேண்டும்" என்றார். "நீனே, எனக்குக் கோபத்தை மூட்டாதே, உனக்குப் பிரியமானால் நீயே கூடிக்கொண்டு போய் உன் எட்டுச்சடங்கை அங்கேயே செய்து முடித்துக்கொள்" என்று மிக்க ஆத்திரத்தோடு இராசமணி சொன்னாள். இந்த உபசாரம் தமக்குக் கிடைக்குமென முருகர் முந்தியொருபோதும் காத்திருக்கவில்லை. அங்கே நின்றால் இன்னும் ஏதும் விசேஷமான உபசாரம் தமக்குக் கிடைக்குமென்று பயந்து முருகர் வாயுந் திறவாது மீண்டுவிட்டார். மீளவே இராசமணியும் கதவைப் படக்கென அடித்துப் பந்தித்தாள். முருகருக்கு அது தமது நெஞ்சிற் புடைத்தாற்போலிருந்தது. அவர் மெல்ல மெல்ல இரத்தினசபாபதி முதலியார் இருக்குமிடத்திற்குப் போனார். "என்ன அம்மான், பேசிப்பார்த்தாயா?" என்று முதலியார் கேட்க, முருகர் "சொன்னேன், பிள்ளை சரியாய் மறுமொழி சொல்லவில்லை, நித்திரைத் தூக்கம் போலும், நீங்கள் தான் நேரிற் கேட்டுப்பாருங்கள்" என்று இரகசியமாகச் சொன்னார். அவர் விரைந்தெழுந்து பள்ளியறையை நோக்கிச் சென்றார். கபாடம் பந்திக்கப்பட்டிருந்தது. கூப்பிடுதற்கும் கதவிலே தட்டுதற்கும் வெட்கப்பட்டு முதலியார் சிறிது நேரம் நின்றார். பின் மெல்லக் கதவிலே தட்டினார். யாரென்று கேட்பாரில்லை. எப்படிக் கூப்பிடுவதென்பது முதலியாருக்கு அப்பொழுது புலப்படவில்லை. சிறிது நேரஞ்செல்ல, "நித்திரையோ" என்றார். கதவு திறக்கப்பட்டது. "ஒருபோது நித்திரையாய் இருக்கக்கூடும் என்று நினைத்தேன்" என்றார் முதலியார். "நித்திரை எப்படி வரும்" என்றாள் இராசமணி. இருவருஞ் சிறிது நேரம் வார்த்தையாடினார்கள். பேசியது யாதென எவர்க்குந் தெரியாது. முதலியார் வெளியே வந்து "சிலநாட் கழித்த பின் தான் பெண்ணை அழைத்துச் செல்வது என்று சொன்னார். அந்தச் செய்தியைத் தமது வீட்டிலுள்ளார்க்கும் தெரிவித்து அதற்குத்தக அங்கே ஆயத்தஞ் செய்யும்படியும் ஒரு வேலைக்காரனிடம் சொல்லியனுப்பினர். (வரும்)

## சமாசாரம்.

### காலநிலை.

சில நாட்களாகக் காற்று அதிகமாக வீசியபின் இப்பொழுது சிறிது ஓய்ந்திருக்கிறது. இடையிடையே மழைக்கோலம் காணப்படுகிறது.

### மகிழடி வைரவசுவாமி கோயிற் கும்பாபிஷேகம்.

கோப்பாய் வடக்கு மகிழடி வைரவசுவாமி கோயில் இப்பொழுது பிரமஸ்ரீ சு. சிவகடாட்சக் குருக்களவர்களாலும் கொத்தாரிசு பிரமஸ்ரீ சி. கங்காதர ஐயரவர்களாலும் புதிதாய் அமைக்கப்பட்டிருக்கிறது. அவ்வாலயத்தில் நாளையத்தினம் பகல் பன்னிரண்டேகால்மணிவரையில் நிகழும் கன்னிலக்கினசுபமுகூர்த்தத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.

### வல்வைச்சைவவாலிபர் சங்கம்.

இந்த மீ 13 திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 6 மணியளவில் மாணிக்கவாசக சுவாமிகளது திவ்வியசரித்திரம் ஸ்ரீ க. மீனாட்சிசுந்தரம்பிள்ளை உபாத்தியாயர் அவர்களால் பக்கவாத்தியசகிதமாகப் பிரசங்கிக்கப்பட்டது. 300 பேர் வரையிற் சமுகமாயிருந்தனர். சிற்றுண்டிவழங்கப்பட்டது. கூட்டம் 10 மணியளவில் முடிவெய்தியது. அடுத்தநாளாகிய 14 திகதி சனிக்கிழமை ஷெ சங்கக்கிழமைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் நிறைவேறியது.-சுயராட்சியக் கட்சித்தலைவரும் வங்காளச்சிங்கமும் பாரதமாதாவின் அரிய புத்திரரும் தியாகமூர்த்தியுமாகிய சித்தரஞ்சனதாசரின் தேகவியோகத்தைக் குறித்து இச்சங்கம் வருந்துவதோடு தனது அனுதாபத்தையும் அவரது குடும்பத்தாருக்கும் அவரது கட்சியாருக்கும் அறிவிக்கிறது. கடித.

### திரிகோணமலையில் விஷபேதி.

சென்ற ஞாயிற்றுக்கிழமை திரிகோணமலையிலே ஒருவர் விஷபேதியினால் இறந்தனர்.

### சுதேச தலைவரின் கூட்டம்.

சென்றசெவ்வாய்க்கிழமை கழுத்துறையிலே அங்குள்ள சுதேசதலைவரின் கூட்டமொன்று நடைபெற்றது. அங்கு எமது பிரதி தேசாதிபதியவர்கள் அக்கிராசனம் வகித்தனர். அப்பொழுது சுகாதாரம், அரசியல், நெற்செய்கை, நீர்ப்பாய்ச்சல் முதலான பலவிஷயங்களைப்பற்றிப் பேசப்பட்டது.

### சுகாதாரப் பரிசோதகர் சருவப்பட்டார்.

சென்ற திங்கட்கிழமை அம்பலாங்கொடையிலே சுகாதார வைத்தியராகிய மிஸ்ரர் விற்றருண என்பவர் தனது கடமை பார்க்கச் சென்றபோது அங்குள்ள சிலர் அவரைச் சருவி அவருடைய தலையை வாளுகக் காயப்படுத்தினர்கள். பரிசோதகர் ஸ்மரணையற்ற நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டார்.

### மோட்டார்பஸ்விபத்து.

சென்றவாரம் கொழும்பிலிருந்து மடுவுக்கு யாத்திரைகாரரை ஏற்றிவந்த மோட்டர்பஸ் ஒன்று அநுராசபுரத்திலே தெருவைவிட்டுக் கானிற் குதித்து அங்குள்ள ஒரு பெரிய மரத்துடன் மோதி ஒரு கல்லுக்குவியலையும் சிதறியது. பிரயாணிகள் பதினேழு பேரும் வெளியே வீசப்பட்டனர். சாரதியும் வேறிருவரும் காயமின்றித் தப்பிக்கொண்டனர். ஒரு பெண் படுகாயமுற்று வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டவுடன் இறந்தனள். இருவர் ஆபத்தானநிலையிற் கிடக்கின்றனர். மூவர் கடுங்காயமுற்றனர்.

### புகைரதப்பகுதி விடுமுறைநாட்களைக் குறைக்கும் யோசனை.

இதுகாறும் புகைரதப் பகுதியாரால் பத்தொன்பது விடுமுறைநாட்கள் அனுசரிக்கப்பட்டு வந்தன. ரேகுப்பகுதியிலே ஒரு வருடத்தில் மூன்று விடுமுறைகள் வகுக்கப்பட்டிருப்பதுபற்றிப் புகைரதப் பகுதித்தலைவரும் அவ்வாறு ஆக்கமுயலுகின்றனர். ஷெ தலைவர் அதற்காகப் புகைரதப்பகுதியிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு ஓர் சுற்றுநிருபம் விடுத்து அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கோரி நிற்கின்றார். உத்தியோகத்தருட் பெரும்பாலார் அதிபருடைய நோக்கத்துக்கு மாறாக நிற்கின்றனரென அறியலாவேம்.

## அஷ்டபந்தனமருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

ரூத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

சு. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(M. 37)

## தேக்கமரம்.

புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்க மரங்கள். நீளம் 6 அடிதொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 10 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம்வரையி லுள்ளன. வேண்டிய மரங்கள் குறைவாயிருப்பதினால், எம்மிடம் வழக்கமாயெடுப்பவர்கள் தங்கள் ஆடர்களை ஏற்கனவே செய்துகொள்ளவேண்டியது.

S. வீரசத்திப்பிள்ளை.
தொண்டமானாறு,

தந்திவிலாசம்
அ பி. வல்லுவெட்டித்துறை.

(H. 37)

## விற்பனவு விளம்பரம்.

### தென்னந்தோட்டம்.

சாவகச்சேரிச் சந்தைக்குத் தென்பாகமாயும், புகையிரத ஸ்தானத்துக்குக் கிழக்குப்பாகமாயும், தனங்களப்புறோட்டுக்கு மேற்குப்பாகமாயும் வயல் வெளிக்கு வடபாகமாயும் இருக்கும் தென்னந்தோட்டம் விற்பனவுக்கு இருக்கிறது. இதன் நில. பர. 212 இதற்குள் காயுள்ளபிள்ளைகள் ஐம்பதுக்குக் குறையாமலும், பாளை வந்தபிள்ளைகள் ஐம்பதுக்குக்குறையாமலும், வருடவீதம் 50, 60 பிள்ளைக்குக் குறையாமற் பாளைவரக்கூடியதாகவும் 400 பிள்ளைகள் நிற்கின்றன. இன்னும் பிள்ளைகள் வைக்கவேண்டிய நிலமுமுண்டு. இதன் நான்கு புறமும் பூவரசினற் தகுந்த வேலிபோடப் பட்டிருக்கிறது. இவ் வேலியடைப்பதற்குப் போதிய "பொற்பத்தை" அலம்பல் இதனுள் உண்டு. இதன் விபரங்களை என்னிடமும், வண்ணார்பண்ணை கிழக்கு ஸ்ரீ கந்தையா இராமலிங்கத்திடமும் அறிந்துகொள்ளலாம்.

க. க. சிவசப்பு,
மீசாலை
சாவகச்சேரி.

(Mis. 671,)

## "ஸ்ரான்டேர்ட்" கொழுக்கியோடுகள்: (Standsrd Tiles)

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ரான்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றேம்:—

முதலாவது, இந்தஓடுகள் மிகப்பாரங்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றவது, இந்த வடஇலங்கையின் தேசசுவாத்தியத்திற்கு இசைந்த ஓடுகள்இவைகளேயாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற நாலு வருடகாலமாக நாம் தருவித்துவிற்றுவருகின்றேம். இந்தநாலு வருடகாலத்தில் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இவை சிறந்தனவென்பதற்கு இந்த ஒரு நியாயமுமே போதிய சான்றுகும்.

S. வீரசத்திப்பிள்ளை,
சோல் ஏஜண்டு,
யாழ்ப்பாணம்.

(H. 34.)

## புதிய தினுசுகள் சகாய விலைகள்

### நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனாரிஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னுடு, காஞ்சீபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய தினுசுகளில் சுத்தமானபட்டுச்சேலைகளும், ஜரிகைநூல்சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டிதெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
COLOMBO.

(Y. 39).

## சேலம் ஜவுளிதினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் செய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், ரூண்டஞ்சு, சன்னஞ்சு, பவுனபேட்டு, இன்னும் பல மாதிரிகள் இருக்கிறது விலாசம்தெரிவித்தால் பிறைஸ் லிஸ்ட் இலவசமாய் அனுப்புகிறேம்.

விலாசம்:
கோ ப. சி. அ. வேணுகோபால்செட்டியார்
அன்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
குகை, சேலம், S. I.

தந்தி விலாசம்:
வேணுகோபால்,
சேலம்

(H 32

## யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாராற் பிரசுரஞ் செய்யப்பெற்ற புத்தக விளம்பம்.

| | ரூ. ச. |
|---|---|
| முதற்பாலபாடப் (சித்திரசகிதமானது) | க0 |
| இரண்டாம் பாலபாடம் ,, | கடு |
| மூன்றும் பாலபாடம் ,, | உ0 |
| நான்காம் பாலபாடம் ... ... | ௩0 |
| ஐந்தாம் பாலபாடம் ... .... .... | ௪0 |
| ஆறும் பாலபாடம் .... ... ... | ௫0 |
| கலாமஞ்சரி விளக்கத்துடன் | எடு |
| கிருட்டிணன்றூது, உரையுடன் | அடு |
| நமச்சிவாயமாலை, உரையுடன்... | ௩ |
| ஆத்திசூடி ... ... ... | ௩ |
| வெற்றிவேற்கையுரை ... ... | ௩ |
| வாக்குண்டாமுரை ... ... ... | ௩ |
| நல்வழியுரை .... ... ... ... | ௩ |
| நன்னெறியுரை ... .... ... ... | ௩ |
| இனியவை நாற்பதுரை (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)... ... ... | கஉ |
| இலக்கண வினுவிடை... ... ... | க0 |
| திகண்டு கக-வதும் கஉ-வதும் ... | உடு |
| திருவாதவூரடிகள்புராண மூலம் ... | உடு |
| திருச்செந்தூர்ப்புராணவுரை | |
| கிளேஸ்காகிதம் ... ... ... | க-உடு |
| றவ்காகிதம்... ... ... ... | க-00 |
| கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் | க0 |
| கந்தசஷ்டி கவசம் ... ... ... | ௩ |
| சுப்பிரமணியசுவாமி விருத்தம் ... | ௩ |
| ஆறுமுகசுவாமி விருத்தம்... ... | ௩ |
| பிள்ளையார்கதை ... ... ... ... | கஉ |
| கதிரைமலைப் பேரின்பக்காதல் ... | கஉ |
| பிரபஞ்சப் பெருவழக்கு ... ... | க0 |
| இந்துசமயி தாவரஜீவியாயிருந்தலேன்? ... ... ... ... ... | க0 |
| சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு) | ௬ |
| குமணசரித்திரம் ,, | ௬ |
| பஞ்சரத்தினத் திருப்புகழ் ... .... | ௩ |
| சோமவாரவிரதமான்மியம்... .... | க0 |
| கந்தவிரதமான்மியம் .... .... .... | க0 |
| சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு) | கடு |
| மறைசையந்தாதி ... ... ... | உ0 |

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்துக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்.

முற்பணமனுப்புவோர் முத்திரையனுப்பாது போஸ்றல் ஆடரேனும் மணி ஆடரேனும் முத்திரைச்செலவுஞ் சேர்த்து வண்ணார்பண்ணைத் தபாலாபீசிற் பெறக்கூடியதாக அனுப்புதல்வேண்டும். இருபத்தைந்து ரூபாவுக்குக் குறைந்த ஆடர்கள் எம்மால் வீ. பீ. யில் அனுப்பப்படமாட்டா.

சபையார் அச்சிட்ட புத்தகங்களன்றி ஏனைய புத்தகங்கள் இங்கு விலைக்குக் கிடையா.

சபையார் அச்சிட்ட புஸ்தகங்கள் வண்ணார்பண்ணை, S. S. சண்முகம், பிறிற்றூனியா ஸ்ரோர், சரஸ்வதி புத்தக சாலை முதலிய இடங்களிலும், பருத்தித்துறை S. P. சுல்த்தான் சிக்கந்தரிடத்திலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப்பிள்ளை, வீ. எம். கந்தசாமி இவர்களிடமும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

## தங்க மலாம் பூசிய ரிஸ்லெட் கெடியாரம்.



இந்த கெடியாரம் பார்வைக்கு பொன் கெடியாரம் போலவேதோற்றும். வெகு அழகாயும் ஆச்சரியமாயும் இருக்கும். சரியாண டைம் காட்டக்கூடியது. வெகு காலம் நன்றுய் போகக்கூடியது.

பொன் கிள்ட் ரிஸ்லெட் கெடியாரமும் பொன் கிள்ட் ஸ்பிரிங் பட்டையுடன் 6-8 0.

ஸ்ட்ரேட் செடல்மெண்டுக்கும் F. M. S. மலையாஸ்ட்ரேட்டும் முன்பணமில்லாமல் C. O. D. மூலியமாக அனுப்ப முடியாது.

விலாசம்:—கனக அண்டு கம்பேனி,
பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

(H. 35)

## பாதி விலை! பாதி விலை!!

ஓர் அதிசயமான சமையத்தைக் கைவிடாதீர்கள்.

### அசல் பட்டு அங்க வஸ்திரம்.

முன் விலை 1-க்கு ரூபா 7.
இப்போது விலை 1-க்கு ரூபா 3.

எங்கள் சொந்த ஆடரின்பேரில் அசல் பட்டு நூலினுல் 5 முழ நீழமும் 3 முழம் அகலமும் அதற்கு ஏற்றமாதிரி அழகிய குச்சிகள், கரைகள் வைத்துக் கெட்டிச் சாயத்தோடு தயார் செய்து வரவழைத்திருக்கிறேம். தினம் 1-க்கு 100 வஸ்திரத்திற்குமேல் சப்ளை செய்துகொண்டு வருகிறேம். எல்லாக் கலர்களிலும் தயாராக இருக்கிறது. இரண்டு அங்க வஸ்திரம் வாங்கினுல் ரூபா 5—8.

ரோல்ட் கோல்ட் ரிஸ்லெட் செடியாரம், 6 மூலை, 4 மூலை பொன் கில்ட் டையல், புதிய மாதிரி, உயர்ந்த தினிசு ரூபா 7.

பொன்ட் லீவர் பாக்ட் கெடியாரம் ரூ 5.

மாணிக்கம் அண்டு கம்பேனி,
நம். 12, அருணசல முதலி வீதி,
மதராஸ்.

(Q. 62)

## அநேக பரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.

25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ்அண்டு மருந்துக்கண்காக்ஷியில் பஸ்கிளாஸ் முதல்தர தேவஒளஷதங்களெனத் தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும் பெற்ற

உலகம் புகழ்வது.




உள்ள நாளும் மறவாதது

சூலை, குஷ்டம், ரணம், மேகம் முதலிய சகல வியாதிக்குங் கைகண்டது.

### பழனி, சி. எம். சாமி

# குரு தாம்ர பஸ்பம்.

முப்பூவினுல் தருக்கற சித்திபதி; களிம்பற்றது; வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றுஞ்செய்யாதது; பத்தியமில்லை. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

பலனில்லாவிடில் பணந் திருப்பிக் கொடுக்கப்படும்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியந் தீரும். மறுமுறை வியாதி திரும்பி வராது. இது சகல வியாதிகளையும் வேரற நீக்கும் சக்தி வாய்ந்தது.

சூலை, குஷ்டம், திமிர், ரணம், மதமதப்பு, தடிப்புகள், கிரந்திகள், பத்துகள், கைகால் ரணங்கள், குன்மம், மேகம், பவுத்திரம், கண்டமாலை, சூலைநீர் முதலிய சகல கர்மவியாதிகளும் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும்.

குறைநோய் சம்பந்த வியாதிகள், விரல்கள் அழுகிப்போயிருந்தாலும்சரி, அம்மட்டில் ஆறிவிடும். இது குஷ்டம், கருமேகம், வெண்மேகம், செயமேகம் முதலியவைகளுக்கு மகா அருமையானது. இதுபோன்ற மருந்து எங்கும் கிடைப்பதரிது.

80 வேளை மருந்து ரூபா 40. 40 வேளை மருந்து ரூபா 20. 20 வேளை மருந்து ரூபா 10. ஏழைகளுக்குப் பாதி விலை. பிரபுக்களுக்கு விலை வேறு. வி. பி. சார்ஸ் பிரதியேகம்.

நற்சாட்சி.

தேகமெல்லாமிருந்த மேகபத்துகள் இருந்த இடந்தெரியாமல் மறைந்துவிட்டன. கைகால் விரல்களிலிருந்த ஆறுத மேக ரணங்கள் பூரா ஆறிவிட்டன. முகவசீகரமும் பசியும் உண்டாயிருக்கின்றன. K. பழனியாண்டிப்பிள்ளை, செருத்தூர், லால்குடி, திருச்சி.

தங்கள் தாமிரபஸ்பம் 64 வேளை சாப்பிடக் கொடுத்ததில் குஷ்டரோகம் குணமாயிற்று சரீரத்திலுள்ள மேகநோய்கள் நீங்கி பாதத்தில்மட்டும் கொஞ்சம் இருக்கிறது. முகதேஜஸ் உண்டாயிருக்கிறது. தவிர வேறு ஒருவருக்கு சூலைநோய் (பித்த குன்மம்) 6 வேளையில் குணமாயிற்று. இன்னும் 80 வேளை மருந்து வி. பி. யில் அனுப்பவும்.

சி. பி. நாராயணபிள்ளை, சப் போஸ்மாஸ்டர், சர்ச்சில் ரோட், றங்கூன். 4-11-21.

## நிகரற்ற மன்மத கோலாகல குளிகை.

அபூர்வ சக்தி வாய்ந்தது!
புதியபலத்தைக்காட்டும்!
ஒருமுறை பரீட்சிக்கவும்!

ஆச்சரியகுணமுள்ளது!
போனபலத்தை மீட்கும்!
அதை இன்றே பார்க்கவும்.

இதற்கு நிகரான மருந்து புவியிலெங்குமில்லை. ஒரேகுளிகையில் பரீட்சிக்கலாம். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி முதலியவைகள் நீங்கி நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி உண்டாகும். கிரீடக்கட்டும், இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வின் இன்பத்தைக் கொடுத்து வாக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஒளஷதமில்லை. பரீட்சைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

120 குளிகை ரூபா 10. 60 குளிகை ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை ரூபா 2. வி. பி. சார்ஸ் வேறு.

திருச்சி கா. இ. ம இப்ராம்ஸா 3-1-23-ல் எழுதுகிறர்:

தங்கள் மன்மத கோலாகல குளிகையைச் சாப்பிட்டதில் இரத்தத்தைச் சுத்திசெய்து நரம்புத் தளர்ச்சியை நீக்கி நல்ல பலத்தையும் வீரியத்தையுங் கொடுத்து உற்சாகத்தையும் இன்பத்தையும் தருகிறது. இன்னும் 3 ரூபாய் குளிகை வி. பி. யில் அனுப்பவும்.

சித்த ஆயுள்வேத டாக்டர்,
C. மலையப்பசாமிப்பிள்ளை,
நித்தியானந்த மெடிக்கல் ஹால்,
பழனி.

(Q. 64 B)

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறர்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனுல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதானு, சாலாமூஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம்' சாம்பிராணிப் பதக்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைரூத்தலுக்கு ரூபா க0. கால் ரூத்தலுக்கு ரூபா ௫ தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பீ. சட்டம் இல்லாததினு முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டுக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.